# Key to Village Development :
# A Handbook on 'Mahatma Gandhi National Rural Employment Guarantee Act (NREGA) for Village Presidents

# கிராம வளர்ச்சிக்கானத் திறவுகோல்:
# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் (NREGA) குறித்து கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கான கையேடு


**ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்**

**ஜாம்செட்ஜி டாடா தேசிய இணைய கல்விக் கழகம், சென்னை**

3வது குறுக்குத் தெரு, நிறுவன பகுதி, தரமணி, சென்னை – 600 113. இந்தியா

தொலைபேசி : +91-44-22541229, 22541698

www.mssrf.org

MSSRF/MA/10/44

# கிராம வளர்ச்சிக்கானத் திறவுகோல்: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் (NREGA) குறித்து  கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கான கையேடு

ஒரு குடும்பத்திற்கு வருடத்தில் (ஏப்ரல் முதல் மார்ச் வரை) 100 நாள் உடல் உழைப்பைக் கொண்ட வேலை **தமிழக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (NREGA)** சட்டத்தின்படி கொடுக்கப்படும். இந்தச் சட்டம் வறுமை ஒழிப்பிற்கான முக்கிய இயந்திரமாக ஆகலாம். அத்தகைய சட்டம் வெற்றி பெற அதைப் பற்றி கிராமப் பஞ்சாயத்து தலைவர்கள் விழிப்புணர்வு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் ஜாம்செட்ஜி டாடா தேசிய இணைய கல்விக் கழகம், ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் எடுத்த சிறு முயற்சியே இப்புத்தகம்.

# கிராம வளர்ச்சிக்கானத் திறவுகோல்:மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் (NREGA) குறித்து கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கான கையேடு

## உள்ளடக்கம்


1. அறிமுகம்
2. நமது கிராமங்களுக்கு நரேகா ஏன் வேண்டும்?
3. நரேகா சட்டத்தின் கட்டாய சரத்துக்கள்
4. தமிழ்நாடு மகாநரேகா திட்டத்தின் தனிச் சரத்துக்கள்
5. நரேகாவின் கீழ் ஆண்டு முழுமைக்கான செயல்பாட்டு படித்தளங்கள்
6. கிராமப் பஞ்சாயத்து மற்றும் கிராம சபையின் பொறுப்புக்கள்
7. வட்டார, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அமைப்புக்களின் பொறுப்புக்கள்
8. பயனாளிகள் குழுவின் செயல்பாடு மற்றும் பயன்கள்
9. தகவல் உரிமைச் சட்டத்தின் செயல்பாடு மற்றும் பயன்கள்
10. சமூக ஆய்வுக் குழுவின் செயல்பாடு மற்றும் பயன்கள்
11. கிராம லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் செயல்பாடு மற்றும் பயன்கள்
12. குறை தீர்க்கும் முறை
13. விவசாயத்தை நரேகா மூலம் மேம்படுத்த சில ஆலோசனைகள்
14. தொழிலாளர்களின் ஆர்வத்தைத் தூண்ட சில ஆலோசனைகள்
15. பொது வேலைவாய்ப்புகளை நரேகா மூலம் உருவாக்க சில ஆலோசனைகள்
16. நரேகாவை மற்ற திட்டங்களுடன் இணைத்து பயன்பெற சில ஆலோசனைகள்
17. கிராமங்கள் கடைபிடிக்கும் சில புதிய யுத்திகள்
18. நரேகாவினால் ஏற்பட்ட சில மகிழ்ச்சிகரமான மாற்றங்கள்
19. நரேகா சிறப்பாகச் செயல்படுவதைக் குறிப்பிடும் அளவுகோல்கள்

20. நரேகா சிறப்பாகச் செயல்பட்டால் கிடைக்கக்கூடிய விருதுகள்

21. சட்ட அமலாக்கம் பற்றிய நிலவரம் – தமிழக நிலவரம்

22. அமலாக்கத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அமைப்புகள்

23. பிற்சேர்க்கை

    1. சமூக ஆய்விற்கான சரிபார்க்கும் பட்டியல்

    2. உதவிய புத்தகங்கள் மற்றும் இணைய தளங்கள்

24. மேலும் விபரங்களுக்கு

ஆக்கம் மற்றும் தகவல் திரட்டு

**ச.வே. முருகராம்,**

தன்னார்வலர், ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்.

குறிப்பு : இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானதாக இருக்க முயற்சி செய்யப்பட்டுள்ள போதிலும் அரசு ஆவணங்களையே மக்கள் சட்ட நடவடிக்கைகளுக்குப் பார்க்க வேண்டும்.

## 1. அறிமுகம்

நமது பாரதத் திருநாட்டின் வளர்ச்சியும், பாதுகாப்பும், நமது கிராமங்களில் வாழும் சராசரி குடும்பங்களின் 825 கோடி மக்களின் வாழ்க்கை நிலையைப் பொருத்தே அமைந்துள்ளன. இந்தியாவின் 6% மக்கள் தொகையைக் கொண்டத் தமிழகத்தில், 56% மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். சுயாட்சிப் பெற்று 62 ஆண்டுகள் கடந்தும் தமிழக கிராமங்களில் இன்றும் ஊட்டச்சத்து குறைபாடும், கல்வி, மருத்துவம் மற்றும் அடிப்படை வசதிகளின் குறைபாடுகளும் காணப்படுகின்றன. இதனால் ஏழை எளிய மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள மிகவும் சிரமப்படுகின்றனர். இந்தக் காரணத்தால் இளைஞர் மற்றும் குழந்தைகளின் எதிர்காலமும் பாதிக்க நிறைய வாய்ப்புகள் உள்ளன.

வேலைசெய்து வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் காண விரும்பும் பல கிராம தொழிலாளர்கள்; கல்வித்தகுதியும், அடிப்படை தொழில் திறனும் இல்லாமல் இருக்கின்றனர். இதனால் நல்ல ஊதியம் அளிக்கக்கூடிய வேலைகளுக்குச் செல்ல முடியாமல் தவிக்கின்றனர். வேலை வாய்ப்புகளும் தட்டுபாடாகவே உள்ளன. இந்தியப் பொருளாதாரம் உலகத்தோடு இன்று ஒன்றிணைந்துள்ள நிலையில் அடிக்கடி நமது பொருளாதாரம் ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்து வருகின்றது. இதனால் வேலை வாய்ப்புகளும் பாதிக்கப்படுகின்றது. பல சமயங்களில் நகர்புற வேலைவாய்ப்புகளும் நிரந்தரமானதாக இல்லை. இந்த நிலையில் கிராமங்களிலேயே வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தரும் எந்த முயற்சியும் வரவேற்கத்தக்கதே.

வறுமையால் வாடும் குடும்பங்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு மட்டுமே வரப்பிரசாதமாக அமைய முடியும். கிராம வளர்ச்சி வேலைகள் மூலம் பொதுமக்களுக்குக் கிடைக்கும் பொது சொத்துகள் அவர்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சியையும் வசதிகளையும் தரும். பாசன மேம்பாடு, நில மேம்பாடு, பேரிடர் பாதுகாப்பு அமைப்புகள், மழைநீர்ச் சேகரிப்பு மற்றும் காடு வளர்ப்பு போன்ற வேலைகள் விவசாயத்தையும், விவசாய வேலைவாய்ப்புகளையும் அதிகப்படுத்த வாய்ப்புள்ளது. மேலும் சாலை வசதியும், கிராம அறிவு மற்றும் வள மையங்களும், இதர நிரந்தர பொது சொத்துகளும், கிராமத்திற்கும் நகரங்களுக்கும் இடையேயான வசதிகளில் இருக்கும் இடைவெளியைக் குறைக்க மிகவும் உதவும். சட்ட விழிப்புணர்வும், தகவல் அறியும் உரிமையின் நன்மைகளும், வங்கி கணக்கும் மக்களுக்கு எந்த வகையிலாவது கிடைக்கப்பெற்றால், அது அவர்களை விழிப்புணர்வு மிக்க குடிமக்களாக மாற்றும். மேற்கூறிய அனைத்து தேவைகளையும், வசதிகளையும் பூர்த்தி செய்யும் அரசுச் சட்டமே **'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டமாகும் (நரேகா – NREGA).** இந்த மத்திய அரசின் சட்டத்தை, தமிழக அரசு **"தமிழக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்"** மூலமாக 2006ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்த மத்திய அரசின் சட்டத்தையும், தமிழக அரசின் திட்டத்தையும் கிராமங்களில் செவ்வனே செயல்படுத்த, இந்தச் சட்டத்தைக் குறித்தும், திட்டத்தைக் குறித்தும், கிராம மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரும்பாடுபடும் கிராம பஞ்சாயத்து தலைவர்களும், பிரதிநிதிகளும் அறிந்து கொள்வது மிக மிக முக்கியமாகும். இந்தச் சட்டமும், சட்ட அமலாக்க வழிகாட்டியும், தமிழக அரசின் திட்ட வழிமுறைகளும் 200-க்கு மேலான பக்கங்களில் அடங்கியுள்ளது. அதை எளிமைப்படுத்திப் பஞ்சாயத்து தலைவர்களும், பிரதிநிதிகளும் எளிதில் படித்து, அதைச் சிறந்த முறையில் அமலாக்கம் செய்ய உதவும் வகையில் **'ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்'** எடுத்த சிறு முயற்சியே இந்தச் சிறிய கையேடாகும்.

இக்கையேட்டினை அனைத்து பஞ்சாயத்து தலைவர்களும், பிரதிநிதிகளும் படித்து, இந்தச் சட்டத்தையும் திட்டத்தையும் நல்ல முறையில் செயல்படுத்தி, தமிழகத்தில் வேலையில்லா நிலையைப் போக்கும் மகத்தான ஆயுதமாகப் பயன்படுத்தித் தமிழகத்தை இந்தியாவின் முன் மாதிரி மாநிலமாக உருவாக்க வேண்டும் என்பதே ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் நோக்கமாகும்.

## 2. நமது கிராமங்களுக்கு நரேகா ஏன் வேண்டும்?

வேலை இல்லாமல் வருமானம் இல்லை, வருமானம் இல்லாமல் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. இதனால் வேலையைத் தேடி நகர்ப்புறங்களுக்கு மக்கள் வெகு விரைவாக குடிபெயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு ஆணையங்கள் இருக்கின்றன. ஆனால், கிராமத் தொழிலாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தை உறுதி செய்யவோ, உயர்த்தவோ முடியவில்லை. மேலும், சட்டத்திற்கு உட்படாத பல திட்டங்கள் உள்ளன. அவற்றை மக்களுக்கு முழு பயன்தரும் வகையில் செயல் படுத்தப்பட முடியவில்லை.

மேற்கூறிய காரணங்களாலேயே "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் - 2005" என்பது ஆகஸ்ட் 2005-ல் இந்திய பாராளுமன்றத்தில் இனிதே நிறைவேற்றப்பட்டு 2006ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ஆம் நாள் முதல் செயல்படத் துவங்கியது.

**இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டால்**

- தண்ணீர் மற்றும் நில மேம்பாட்டு வேலைகள் மூலம் விவசாய வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும்.
- மழைநீர்ச் சேமிப்பு வசதிகள் உண்டாகும்.

- கிராமத்திலுள்ள குடும்பங்களுக்கு வறுமையிலிருந்தும் பசியிலிருந்தும் பாதுகாப்பு பெருகும்.
- வேலைத்தேடி நகர்ப்புறத்திற்கு வரும் குடும்பங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறையும்.
- பெண்ணுரிமை ஓங்கும். பெண்களுக்கும், ஆண்களுக்கும் சம ஊதியம் கொடுப்பது இயல்பாகும்.
- கிராமத்தினுள், ஏழைகளுக்கும் பணம் படைத்தவர்களிடமுள்ள உறவில் மாற்றம் ஏற்படும்.
- குறைந்த பட்சம் ஊதியம் பெறுவது இயல்பாகும்.
- தனியார் துறையில் வேலை செய்யும்போது நரேகா கூலியைவிட கூடுதல் கூலி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.
- சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு குறைந்து சமூகப் பாதுகாப்பு ஓங்கும்.
- அமைப்புச் சாராத ஊழியர்கள் அமைப்புக்கு உட்படுவர்.
- ஊழியர்கள் இயக்கம் வலுப்பெறும்.
- கிராமங்களில் புதுப்புது கட்டடங்களும், சாலைகளும், மற்ற வசதிகளும் பெருகும்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு பெருகும்.
- வேலையில்லாமையால் இளைஞர்களுக்கு வரும் விரக்தி நீங்கும்.
- குழந்தைகள் வேலைக்கும் செல்லும் அவல நிலை நீங்கும்.

சுருங்கச் சொன்னால் நமது கிராமங்கள் புத்துயிர் பெற்றுச் சிறந்தோங்கும்.

## 3. நரேகா சட்டத்தின் கட்டாய சரத்துக்கள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ன் அட்டவணை 1-ன் கீழ் கீழ்க்கண்ட தொழிலாளர் உரிமைகளை பஞ்சாயத்து காக்கவேண்டும்.

- ஒரு குடும்பத்திற்கு வருடத்தில் (ஏப்ரல் முதல் மார்ச் வரை) 100 நாள் வேலை சட்டப்படி கொடுக்கவேண்டும்.
- இதைக் கொடுக்க அரசு / பஞ்சாயத்து தவறினால் பாதிக்கப்பட்டவருக்கு முதல் 30 நாட்களுக்குச் சம்பளத்தில் கால் பங்கும், மேலும் தவறினால் பாதி ஊதியத்தை

அபராதமாக வேலைகொடுக்கும் வரை அரசு தர வேண்டும். (தமிழகத்தில் சட்டப்பிரிவு 42ன் கீழ் புதுவையில் சட்டப்பிரிவு42.1ன் கீழ்)

- மூன்றில் ஒரு பங்கு வேலை பெண்களுக்கு அளிக்கப்படவேண்டும்.
- தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு இத்திட்டத்தில் பங்கு, எந்த வகையிலும் இருக்கக்கூடாது.
- தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதைப் பாதிக்கும் எந்த எந்திரத்தையும் பயன்படுத்தக்கூடாது.
- தேசிய பேரிடர்களான வெள்ளம், புயல், சுனாமி மற்றும் பூகம்பங்கள் வரும்போது தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் கிராமங்களிலும் நரேகாவின் கீழ் வேலை அட்டை இல்லாதபோதும் வேலை செய்து ஊதியம் பெற உரிமையுண்டு.
- தொழிலாளர்கள் ஐந்துபேர் வேலை இடத்தில் ஏற்கும் பொறுப்புக்கள்
    - பஞ்சாயத்தின் ரசீதுகளையும்
    - பஞ்சாயத்தின் வவுச்சர்களையும்
    - பஞ்சாயத்து வாங்கும் பொருட்களையும்
    - தொழிலாளர்கள் அன்று வேலை செய்த அளவின் அளவீடுகளையும் சரிபார்த்து கையொப்பமிடவேண்டும். இந்த ஐவருக்கு மாறாக வேறு ஐந்து பேர் வாராவாரம் மாற்றிப் பொறுப்பெடுத்துக்கொள்ளலாம்.
    - 60:40 என்ற விகிதத்தில் ஊதியத்திற்கும் இடுபொருட்களுக்கும் ஆகும் செலவு அமைய வேண்டும்.
    - நரேகாவின் கீழ் பதியப்பட்ட வேலை அட்டை உடைய தொழிலாளர்கள் முன் விண்ணப்பம் இன்றியும் வேலை இடத்துக்கு வந்து வேலை கேட்கலாம். அவர் பெயரையும் வருகை பதிவேட்டில் சேர்த்து விண்ணப்பத்தையும் பூர்த்தி செய்து கொள்ள உதவ வேண்டும். (ஓ.ஜி. பிரிவு 54.4. பக்கம் 48, operational guideline 2008, Sec. 5.4.4, Page 48)

## 3. நரேகாவிற்குள்ளாக மேற்கொள்ளக்கூடிய வேலைகள்

நரேகாவின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து வேலைகளும் கிராமங்களில் மட்டுமே செயல்படுத்தவேண்டும்.

1. தண்ணீர்ச் சேகரிப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு
2. வறட்சித் தடுப்பு (மரம் நடுதல் மற்றும் காடு வளர்ப்பு)
3. பாசனக் கால்வாய் பராமரிப்பு (சிறு மற்றும் மிக சிறு பாசன கால்வாய்கள் உட்பட)
4. கீழ்க்கண்ட குடும்பங்களுக்குப் பாசன வசதி, மரம் நடுதல், தோட்டக்கலை சாகுபடி மற்றும் நில மேம்பாடு செய்து கொடுத்தல்.
    - பிற்படுத்தப்பட்டோர்
    - பழங்குடியினர்
    - வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்கள்
    - நில சீர்த்திருத்தத்தின் பயனாளிகள்
    - மத்திய அரசின் இந்திரா வீட்டு வசதி திட்டத்தின் பயனாளிகள்
    - 2008 ஆம் ஆண்டின் விவசாய கடன் ரத்து திட்டத்தின் பயனாளிகள்.

இந்தச் சலுகையைப் பயன்படுத்த கீழ்க்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(அ) தனிப்பட்ட முறையில் நிலத்தை உரிமைகொண்டுள்ள நபர், வேலை அட்டை உடையவராக இருக்கவேண்டும். மேலும் அவர் அந்த நிலத்தில் நடக்கும் திட்ட வேலையில் பங்கு கொள்ள வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு வேலையிலும் கூலிக்கும்/ பொருட்களுக்குமான 60:40 என்ற விகிதம் கிராம பஞ்சாயத்து அளவில் கடைபிடிக்க வேண்டும்.

(இ) திட்டம் கிராம சபையாலும், கிராமப் பஞ்சாயத்தாலும் ஒப்புதல் அளிக்கப்படவேண்டும். இது ஆண்டு வேலைப்பட்டியலில் இடம் பெற வேண்டும்.

(ஈ) ஒப்பந்தக்காரரோ, எந்திரங்களோ பயன்படுத்தக்கூடாது.

(உ) எந்திரங்கள் வாங்கப்படவும் கூடாது.

5. பாரம்பரிய நீர்நிலைகளைப் புதுப்பித்தல் மற்றும் குளங்களைத் தூர்வாருதல்.
6. நில மேம்பாடு
7. வெள்ளத் தடுப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள் (தண்ணீர் தேங்கிய இடங்களில் வடிகால் வசதி செய்தல் உட்பட)

8. அனைத்து பருவ காலங்களுக்கும் உகந்த சாலைகள் மூலம் கிராமங்களை இணைத்தல்

9. இந்திய அரசால் அறிவிக்கப்படும் இதர வேலைகள் (பாரத் நிர்மான் ராஜீவ் காந்தி கிராம சேவை மையம் - கிராம அறிவு வளமையமாகவும், பஞ்சாயத்து அலுவலக கட்டிடமாகவும் அனைத்து கிராம பஞ்சாயத்துக்களிலும் 10 இலட்ச ரூபாய்க் குள்ளாகவும், யூனியன் வட்டார அலுவலகங்களின் 25 லட்ச ரூபாய்க்குள்ளாகவும் அமைத்தல்)

## 4. தமிழ்நாடு மகாத்மா காந்தி நரேகா திட்டத்தின் சரத்துக்கள்

- தமிழ்நாடு மகாத்மா காந்தி நரேகா திட்டம் G.O. Ms. No. 89, Rural development and Panchayat Raj (CGS I), 2 ஆகஸ்டு 2006ன் படி செயல்படுத்தப்படுகின்றது.

- மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு (தமிழகத்தில் மாவட்ட ஆட்சியர்) மாவட்ட அளவிலும், வட்டார திட்ட அதிகாரிக்கு வட்டார அளவிலும் மற்றும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்கு கிராம அளவிலும் திட்டத்தை அமலாக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை மாவட்ட திட்ட இணை ஒருங்கிணைப்பாளராக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் செயல்படுவார்.

- பஞ்சாயத்து அளவிலான 'சுய உதவிக்குழுக்களின் சம்மேளனம்' அல்லது இளைஞர் குழுக்களின் சம்மேளனம் நல்ல பணியாற்றியமைக்கான சான்று இருந்தால், அவற்றை நரேகாவை அமல் செய்ய உதவும் அமைப்பாக பயன்படுத்தலாம்.

- வேலைக்கு விண்ணப்பத்தாரர் பொய்யான விவரங்களுடன் விண்ணப்பித்து இருந்தால், அவரது மனுவை பரிசீலனை செய்யும்போது இரண்டு தனி நபர்கள் முன்னிலையில் விசாரிக்க வேண்டும். தவறு கண்டறியப்பட்டால் திட்ட அதிகாரிக்குத் தெரிவித்து அவர் பெயரை நீக்கலாம்.

- வட்டார திட்ட அலுவலர் குறைந்தது 50% நரேகா வேலையைக் கிராம பஞ்சாயத்து மூலம் செயல்படுத்த வேண்டும்.

- மீதம் உள்ள வேலைகளை அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், அரசு சாரா அமைப்புக்கள், சுயஉதவிக்குழுக்கள் மற்றும் இதர அமைப்புக்கள் மூலம் அமல் செய்யலாம். இந்த அமைப்புகளுக்கு ஆன செலவினங்களை அரசு ஏற்க வேண்டும்.

- வேலைகளைச் செய்யும்போது பஞ்சாயத்து அலுவலர் அதைப் ‘பஞ்சாயத்து வேலை’ என்றும் ‘பொது வேலை’ என்றும் குறிப்பிடவேண்டும். பஞ்சாயத்து வேலையைப் பஞ்சாயத்தும், பொதுவேலை என்பதைப் பிற அரசு நிறுவனங்களும் வேலை உறுதி திட்டத்தின் கீழ் செயல்படுத்தும்.
- விபத்தில் காயமடைந்தவர்களுக்கு மாவட்டத் தலைமை மருத்துவமனை உள்ளடக்கிய எந்த மருத்துவ மனையிலும் இலவச சிகிச்சை தரலாம்.
- மருத்துவ மனையில் தங்கியுள்ளபோது தங்கும் வசதி, மருத்துவ செலவு, மருந்துக்கான செலவு, தினக்கூலி (பாதி கூலிக்குக் குறையாமல்) அளிக்க வேண்டும்.
- வன கிராமங்களில் வனத்துறை மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளரின் ஆலோசனைபடி இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதே சமயம் வனப்பாதுகாப்பு சட்டம் 1980ஐயும் சட்ட திருத்தங்களையும் அமல் செய்ய வேண்டும்.

## 5. நரேகாவின் கீழ் ஆண்டு முழுமைக்கான செயல்பாட்டுப் படித்தளங்கள்

| வ. எண். | மாதம் | நிகழ்வுகள் |
|---|---|---|
| 1. | அக்டோபர் - 2 ஆம் தேதி | ● கிராமசபை மற்றும் நரேகா சமூக ஆய்வு நடத்த வேண்டும்.<br>● கிராம சபைக் கூட்டத்தில்<br>1. வேலைகளைக் கண்டறிய வேண்டும்.<br>2. வேலைகளை வரிசைப்படுத்த வேண்டும்<br>3. தீர்மானம் எழுதி, திட்ட அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும். |
| 2. | அக்டோபர் 15 ஆம் தேதி | கிராமப் பஞ்சாயத்தின் வளர்ச்சித் திட்டம் திட்ட அதிகாரிக்குச் சென்றடைய வேண்டும். இல்லையெனில் கிராம சபையின் தீர்மானம் பஞ்சாயத்தின் வளர்ச்சித்திட்டமாகக் கருதப்படும். |
| 3. | நவம்பர் 15 ஆம் தேதி | திட்ட அதிகாரி அனைத்து கிராமங்களில் வேலை பட்டியல்களைச் சரிபார்த்து தொகுத்து வட்டார/ யூனியன் பஞ்சாயத்துக்குச் சமர்பிக்க வேண்டும். |
| 4. | நவம்பர் 30 ஆம் தேதி | வட்டார/ யூனியன் பஞ்சாயத்து அதற்கு ஒப்புதல் அளித்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு, மாவட்ட ஆட்சியருக்குச் சமர்பிக்க வேண்டும். |
| 5. | டிசம்பர் 15ஆம் தேதி | மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் (மாவட்ட ஆட்சியர்) வட்டார / யூனியன் ரீதியான வட்டார திட்டத்தை / வேலை பட்டியலை மாவட்ட பஞ்சாயத்துக்குச் சமர்ப்பிப்பார். |
| 6. | டிசம்பர் 31 ஆம் தேதி | அதை மாவட்ட பஞ்சாயத்து டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும். |
| 7. | ஜனவரி 26 ஆம் தேதி | கிராம சபை கூட்டம் மற்றும் நரேகா சமூக ஆய்வு நடத்த வேண்டும். |

| வ. எண். | மாதம் | நிகழ்வுகள் |
|---|---|---|
| 8. | ஜனவரி 31 ஆம் தேதி | மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் (மாவட்ட ஆட்சியர்) வட்டார திட்டத்தை /வேலைப் பட்டியலை மாநில அரசுக்கு அனுப்பி, பின்பு அதைப் பரிந்துரை கடிதத்துடன் மாநில அரசு, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்துக்கு அனுப்ப வேண்டும். |
| 9. | மே - 1ஆம் தேதி | கிராமசபை கூட்டம் மற்றும் நரேகா சமூக ஆய்வு நடத்த வேண்டும் |
| 10. | ஆகஸ்ட் 15 ஆம் தேதி | கிராமசபை கூட்டம் மற்றும் நரேகா சமூக ஆய்வு நடத்த வேண்டும். |
| 11. | செப்டம்பர் 30ஆம் தேதி | முந்தைய ஆண்டிற்கான பட்டையக் கணக்கரின் (சார்டட் அக்கவுண்டன்ட்) அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். |

## வழிமுறை வரைபடம்

| வேலை வேண்டுவோர்கள் சட்டத்தைப் பயன்படுத்தும் வழிமுறை | கிராம பஞ்சாயத்து சட்டத்தைச் செயல்படுத்தும் வழிமுறை |
|---|---|
| வேலை அட்டை பெற விண்ணப்பித்தல் ↓ | வேலை அட்டையைப் பதிவு செய்தல் ↘ / கிராம சபை பரிந்துரை செய்த வேலைகளை ஆராய்ந்து திட்டமிடல் ↙ |
| வேலை அட்டை பெறுதல் ↓ | வேலை வேண்டுவோருக்குத் திட்டமிடப்பட்ட வேலைகளைச் செய்ய அனுமதித்தல் ↓ |
| வேலை வேண்டி விண்ணப்பித்தல் ↓ | வேலை செய்ததற்குக் கூலி வழங்குதல் மற்றும் முடிந்த வேலை குறித்து கிராம சபைக்கு அறிக்கை அளித்தல் ↓ |
| வேலை செய்தல் ↓ | கிராம சபை சமூக ஆய்வு செய்து பரிந்துரைக்கும் முடிவுகளை அமலாக்குதல் ↓ |
| பஞ்சாயத்து எங்கு எப்போது வேலை என்று அறிவிக்கும் ↓ | மேல் நிலையில் இருக்கும் அரசுக்கு ஆண்டு அறிக்கை சமர்ப்பித்தல் ↓ |
| வேலை செய்ததற்கு அன்றோ ஒரு வாரம் கழித்தோ கூலி பெறுதல் (வங்கியிலோ / கையிலோ) ↓ | மேல் நிலையில் இருக்கும் அரசு பரிந்துரைக்கும் சீர்திருத்தத்தை அமல் செய்தல் |
| மீண்டும் வேலை கிடைக்காத சமயத்தில் வேலை வேண்டி விண்ணப்பித்தல் ↓ | |
| பஞ்சாயத்து எங்கு எப்போது வேலை என்று அறிவிக்கும் | |

## 6. கிராம பஞ்சாயத்து மற்றும் கிராம சபையின் பொறுப்புக்கள்

**கிராம சபையின் பொறுப்புக்கள்**

- கிராம சபை கூட்டத்தில் குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதேபோல், பெண்கள், பிற்படுத்தப்பட்டவர், அட்டவணை வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் மற்ற சிறுபான்மையினரின் குறைந்தபட்ச வருகை உள்ளதா எனப் பார்க்க வேண்டும். ஆனால், வருகை குறைவாக உள்ளது என்பதால் குறைகளைக் கேட்காமல் இருக்கக்கூடாது.
- வளர்ச்சிப்பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைக் கிராம பஞ்சாயத்துக்குப் பரிந்துரை செய்வது.
- அக்டோபர் 2-ஆம் தேதி சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில், அடுத்த நிதி ஆண்டில் செய்ய வேண்டிய வேலை குறித்தும், தேவைப்படும் வேலைவாய்ப்புகள் குறித்தும், திட்ட அதிகாரிக்குத் தனது தீர்மானத்தை அனுப்ப வேண்டும்.
- அடுத்தடுத்து செயல்படுத்தக்கூடிய வளர்ச்சிப் பணிகளின் பட்டியலைத் தயாரிப்பது, அதன் குறிப்பிட்ட கால இடைவெளியில் மறுபரிசீலனை செய்தல்
- கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடக்கும் பணிகளை மேற்பார்வை யிடுதல்.
- கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதியில் நடக்கும் பணிகள் மற்றும் அதன் பயன்பாடு குறித்த, சமூக ஆய்வை அடிக்கடி நடத்தும் மிக முக்கிய பொறுப்பு கிராம சபைக்கு உள்ளது.
- பொய்யான தகவல்களைத் தந்து வேலை அட்டையையோ அல்லது வேலையையோ தொழிலாளர்கள் கேட்டிருந்தால் அவர்கள் பெயரைக் கிராம பஞ்சாயத்துத் தொழிலாளர் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும். அதன் பின் நீக்கப்பட்ட அனைத்து தொழிலாளர்களின் பட்டியலையும் கிராம சபைக்கு வழங்க வேண்டும். கிராம சபை அந்தப்பட்டியலைச் சரிப்பார்க்கும் அதிகாரம் பெற்றுள்ளது.
- சமூக ஆய்வின்போது நரேகா குறித்த அனைத்து கணக்குகளையும் கிராம சபை ஆய்வு செய்ய வேண்டும்.
- கிராம சபை ஓர் ஆண்டிற்கு “லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவை”த் தேர்வு செய்ய வேண்டும்.

- ஆண்டின் முதல் தவணை நிதியின் 60% பயன்படுத்திய பிறகு, கிராம பஞ்சாயத்து அடுத்த தவணை நிதியைக் கேட்கலாம். செலவினங்களுக்கு கிராம லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவும், கிராம சபையும் ஒப்புதல் அளித்தால் மட்டுமே அடுத்த தவணை நிதியைப் பஞ்சாயத்து கேட்க முடியும்.
- மூன்று மாதத்திற்கு ஒரு முறை நரேகா குறித்த அனைத்து ஆவணங்களையும் கிராமப் பஞ்சாயத்து கிராம சபைக்குக் காட்ட வேண்டும்.
- கிராம சபை தொழிலாளர்களின் குறை கேட்டு தீர்க்கும் மன்றமாகவும் அமையும்.
- திட்டங்களின் பொறியியல் ஒப்புதல்களையும் கிராம சபைக்குச் சமர்பிக்க வேண்டும்.

## ii கிராம பஞ்சாயத்தின் பொறுப்புக்கள்

### அ. திட்டமிடுதல்

- கிராம சபையின் பரிந்துரையின் அடிப்படையில் ஒவ்வொரு கிராம வளர்ச்சித் திட்டத் தினையும் வளர்ச்சிப் பணிகளின் பட்டியலையும் தயாரிக்க வேண்டும்.
- தேவையான அளவு வேலையை முன்கூட்டியே தேர்வு செய்து வைக்க வேண்டும்.
- பல தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் திட்டத்தை நிர்ண யிக்கவேண்டும்.
- திட்டத்தை அமல்படுத்தும்போது முடிந்தவரை உள்ளூரிலேயே கிடைக்கும் இடுபொருட்களையே பயன்படுத்த வேண்டும்.
- பேரிடரைத் தடுக்கும் தொழில் நுட்பத்தை கையாள வேண்டும்.
- வேலைகளைக் கண்டறிந்து அதன் தன்மையைப் பொறுத்து தொகுத்து வைக்க வேண்டும்.
- தொழிலாளிகளின் வேலைக்கான எதிர்பார்ப்பையும் வேலைவாய்ப்பையும் சமன் செய்ய வேண்டும்.
- ஐந்து ஆண்டு வேலை திட்டம், வேலை எதிர்பார்ப்பு, செய்யகூடிய வேலைகள், நிதி நிலை, தற்போது கிராமத்தில் கொண்டு அமைத்து கிராம சபையின் ஒப்புதலுக்கு அளிக்க வேண்டும்.
- டிசம்பர் மாதம் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஆண்டு வேலை திட்டத்தை முடிவு செய்து ஒப்புதல் பெற வேண்டும்.

- கட்டுமான பொருட்களுக்கான செலவு மொத்த செலவில் 40%க்கு மேல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- அருகிலுள்ள ஆராய்ச்சி அமைப்புக்களின் தொழில்நுட்ப உதவியுடன் சிறந்த, விலை குறைந்த பேரிடரை தாங்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக அரசுத்துறை நிறுவனங்களான அந்தந்தப் பகுதியிலுள்ள வேளாண் அறிவியல் நிலையங்கள், பல்கலைக் கழகங்கள் அல்லது அரசு சாரா அமைப்புகளான ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற மற்ற அமைப்புகளையும் அணுகி ஆலோசனைப் பெறலாம்.
- வேலையை திட்டமிடும்போது பருவ நிலையை மனதில் கொண்டு திட்டமிட வேண்டும்.
- நரேகா வேலைகள் மக்களுக்கு நீண்டகால அளவில் பயனுள்ளதாகவும், பயனை எளிதில் உணரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இந்த வேலைகள் மூலம் உருவாகும் வசதிகள் நீண்ட நாட்கள் பயன்தரக் கூடியதாகவும், பலருக்கு நல்லப் பயனைத்தரும்படியும் செயல்படுத்த வேண்டும்.

**ஆ. பதிவு செய்தல்**

- நரேகாவின் கீழ் வேலை செய்ய விரும்பும் மக்களை பதிவு செய்து உடனே வேலை அட்டை வழங்குதல்.
- வேலைகோரும் மனுவை பெற்று அதனை தேதியிட்ட ரசீதை வழங்குதல்
- வேலை வாய்ப்புக்களை சமமாக வேலை கேட்போருக்கு பகிர்ந்தளித்து அவர்களை வேலை செய்ய அழைத்தல்
- வேலை அளிக்கப்பட்டோரின் பட்டியலை பொது இடத்தில் உள்ள விளம்பர பலகையில் வைக்க வேண்டும்.
- வேலைக்கான பதிவு ஆண்டு முழுவதும் நடைபெற வேண்டும்.
- பதிவு விண்ணப்பத்தின் ஆய்வு 15 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். இறுதி பதிவு பட்டியல் பஞ்சாயத்து அலுவலகத்தில் ஒட்டப்பட வேண்டும்.
- தேசிய பேரிடர்களான வெள்ளம், புயல், சுனாமி மற்றும் பூகம்பங்கள் போது தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து இருக்கும் நிலையில்
  - வேலைக்காகவோ, வேலை அட்டைக்காகவோ இடம் பெயர்ந்துள்ள இடத்தில் உள்ள கிராம பஞ்சாயத்திலோ, வட்டார பஞ்சாயத்திலோ பதிவு செய்யலாம்.

- ➢ இடம் பெயர்ந்தள்ள இடத்தில் உள்ள கிராம பஞ்சாயத்திலோ வட்டார பஞ்சாயத்திலோ வேலைக்காக வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.
- ➢ வேலை அட்டை காணாமலோ அல்லது சிதைந்து போனாலோ மீண்டும் பதிவதற்கும், வேலை அட்டையை மீண்டும் பெற விண்ணப்பிப்பதற்கும் உரிமை உண்டு.
- ➢ தற்காலிக இடத்தில் கொடுக்கப்பட்ட வேலையை மொத்தம் உள்ள 100 நாள் வேலையில் கழிந்ததாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

- வேலை அட்டை பதிவேட்டை ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டும்
- தங்களால் வேலை கொடுக்க முடியாத சமயத்தில் பஞ்சாயத்துக்கு வெளியே வேலை தர வட்டார திட்ட அலுவலரை அணுக வேண்டும்.
- உள்ளூரில் வேலை இல்லாதபோது வட்டார திட்ட அதிகாரி, இரண்டு ஊர்களுக்குப் பொதுவான வேலைகளை ஆரம்பித்து அதைப் பஞ்சாயத்துகளுக்கு தெரிவிக்க வேண்டும்.
- வேலையைப் பகிர்ந்தளிக்கும்போது தொழிலாளருக்குக் கடிதம் மூலமோ பொது அறிவிக்கை மூலமோ தெரிவிக்க வேண்டும்.

**இ. வேலை அட்டை**

- வேலை அட்டைக்காகவும், வேலைக்காகவும் வாய்மொழியாகவோ, வெள்ளைத் தாளிலோ அல்லது அதற்கான படிவத்திலோ தொழிலாளர்கள் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை அட்டை தரப்படவேண்டும். இது ஒரு சட்டபூர்வமான ஆவணமாகும். இது 5 ஆண்டுகளுக்குச் செல்லத்தக்கதாகும். இது குறித்து புகார் இருந்தால் 15 நாட்களுக்குள் வட்டார அதிகாரி பதில் அளிக்க வேண்டும்.
- புகைப்படத்துடன் கூடிய வேலை அட்டை இலவசமாக வழங்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு வீட்டிற்கும் தனி வேலை அட்டை வழங்கப்படவேண்டும்.
- வேலை அட்டையில் பொய்யான பதிவு செய்யப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**ஈ. வேலையை செயல்படுத்துதல்**

- ஒருநாளைக்கு 7 மணிநேர வேலை. வாரத்தில் 6 நாட்கள் மற்றும் ஒரே சமயத்தில் தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு வேலை என்ற முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- வேலை இடத்தில் இருக்க வேண்டிய அனைத்து வசதிகளும் இருக்க வேண்டும்.
- வேலை-கூலி அட்டவணையின்படி கூலி வழங்கப்பட வேண்டும்.
- வேலையை அளக்கும் அளவு, முறை பற்றிய விவரம் வேலை செய்யும் இடத்தில் இருக்க வேண்டும்.
- வாராவாரம் பொறியாளர் வேலையை அளக்க வேண்டும்
- தொழிலாளர் வருகைப் பதிவேடு (NMR / என்.எம்.ஆர்) வைக்கப்பட்டு ஒவ்வொரு பக்கத்துக்கும் எண்ணிட பட்டதாக இருக்கவேண்டும்.
- ஒப்பந்தக்காரர்கள், வேலையாட்களின் வேலை வாய்ப்பை குறைக்கும் எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டது தெரிய வந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**உ. வேலை செய்யும் இடத்தில் இருக்கவேண்டிய வசதிகள்:**

- குடிநீர், நிழல், அவசர சிகிச்சை வசதி, மற்றும் குழந்தைகள் காப்பகம் ஆகிய வசதிகள் அனைத்து வேலை செய்யும் இடத்திலும் இருக்கவேண்டும்.
- ஆறு வயதிற்குள்ளாக ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் குழந்தைகள் இருந்தால் ஒரு பெண்மணியை அவர்கள் கவனித்துக்கொள்ள முழு ஊதியம் கொடுத்து நியமிக்க வேண்டும்.

**ஊ. கூலி அளித்தல்**

- வாராவாரம் ஊதியம் அளிக்கவேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் 15 நாட்களுக்கு மேலாக ஊதியம் தராமல் இருக்கக்கூடாது.
- ஊதியம் தாமதமாகத் தரப்பட்டால் ஊதியம் வழங்கல் சட்டம் 1936ன் கீழ் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும்.
- அரசு அறிவித்த குறைந்தபட்ச ஊதியத்திற்குக் குறைவான ஊதியம் தரக்கூடாது (தமிழகத்தில் ரூ.100 ஒரிசாவில் 70. ஹரியானாவில் 141/-)
- மாநில அரசு நிர்ணயித்துள்ள வேலை ஊதிய அட்டவணையின்படி உரிய ஊதியம் தரப்படவேண்டும்.

- சமமான கூலிச் சட்டம், 1976ன் கீழ் சமமான வேலைக்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான கூலி வழங்கப்பட வேண்டும்.
- வேலையில்லா படி அளிக்க வேண்டிய நிலையைத் தவிர்க்க, கேட்டவுடன் வேலை கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**எ. கீழ்க்கண்ட வெளிப்படையாக நிர்வகிக்கப் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.**

- தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் நரேகாவின் செயலாக்க வழிமுறையில் வெளிப்படையான செயல்பாட்டையும், நம்பகத்தன்மையையும் உறுதி செய்ய வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது.
- வேலைக்கான பதிவு மக்கள் முன்னிலையில் நடக்க வேண்டும்.
- மக்கள் தங்களைப் பற்றிய தகவல்கள் சரியாகப் பதியப்படுகின்றனவா என்பதை சரிபார்க்கும் அதிகாரம் பெற்றவர்களாவர்.
- பதிவு செய்யப்பட்ட குடும்பங்களின் பட்டியல் கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் அனைவரின் பார்வைக்கு வைக்கப்படவேண்டும். மேலும் அதை 3 மாதத்திற்கு ஒரு முறையாவது புதுப்பிக்க வேண்டும்.
- நரேகா தொழிலாளர்களின் குறைந்த பட்ச உரிமைகள் பற்றிய விவரம் அனைத்து வேலை அட்டையின் பின்புறம் அச்சிட வேண்டும்.
- நரேகாவின் கீழ் நடக்கும் அனைத்து வேலைகளையும் ஆய்வுசெய்ய உள்ளூர் லஞ்சத் தடுப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். இதைக் கிராம சபை தேர்வு செய்யும். இதில் பெண்களுக்கும், அட்டவணை வகுப்பினருக்கும் இடம் அளிக்கப்படவேண்டும்.
- ‘கிராம லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு’ அனைத்து வேலைகளையும் ஆய்வு செய்ய வேண்டும் மேலும் ஆய்வு அறிக்கையின் விவரத்தை மத்திய அரசு கூறிய படி ‘வேலை பதிவேட்டில்’ குறிப்பிட வேண்டும். கிராம சபை சமூக ஆய்வு செய்யும்போதும் சமர்பிக்க வேண்டும்.
- வேலையின் விபரம் வேலை நடக்கும் இடத்தில் எளிதாகப் படிக்கும் வகையில் அறிவிப்புப் பலகையில் அறிவிக்க வேண்டும்.
- கூலியைப் பொது இடத்தில் அனைவரின் கண்முன்னால் குறிப்பிட்ட நாட்களில் அளிக்க வேண்டும்.

- அனைத்து நரேகா வேலைகளையும் கிராம சபை சமூக ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- சமூக ஆய்வுக்காக நரேகா சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் கிராம சபைக்கு வழங்குவது.
- வேலை செய்தோரின் பதிவுப் பட்டியலின் நகலைப் பொது பார்வைக்காக கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் வைப்பது.
- நரேகாவின் கீழ் நடத்தப்பட்ட வளர்ச்சிப்பணிகள், உருவாக்கப்பட்ட பொதுச் சொத்துக்கள் மற்றும் பயனாளிகள் குறித்து ஆண்டு அறிக்கை தயாரித்து கிராம சபைக்கும், அரசுக்கும் வழங்குவது
- குடிமக்கள் தகவல்பலகை வேலை செய்யும் இடத்திலும், பஞ்சாயத்து அலுவலகத்திலும், யூனியன் அலுவலகத்திலும், மாவட்ட அலுவலகத்திலும் வைக்கப்பட வேண்டும். அதில் உள்ள தகவல்கைள அடிக்கடி புதுப்பித்து மாற்றி எழுத வேண்டும்.

  யார் வேண்டுமானாலும் வேலை செய்யும் இடத்தில் வேலையாட்களின் வருகை பதிவேட்டை 'மஸ்டர் ரோல்' என்.எம்.ஆர். சோதித்து பார்க்கலாம்.

**ஏ. மற்ற ஏணிப்படிகள்**

**வேலையில்லா படி தராமல் இருக்கும் சந்தர்ப்பங்கள்**

1. தொழிலாளி வேலையை ஏற்றுக்கொள்ளாதபோது,
2. வேலைக்கு அழைத்த 15 நாட்களுக்குள் வேலைக்கு வராமல் இருக்கும்போது
3. தொடர்ந்து ஒரு வாரமோ அல்லது மாதத்தில் ஒரு வாரமோ அனுமதியின்றி வேலைக்கு வராமல் இருக்கும்போது
4. பொய்யான தகவல் அளித்து வேலைக்கு விண்ணப்பித்திருக்கும்போது
5. குடும்பத்திற்கு 100 நாட்கள் வேலை முடிந்த நிலையின்போது
6. அந்த குடும்பத்திற்கு இதுவரை வாங்கிய கூலி மற்றும் வேலையில்லா படியின் மொத்த தொகை, அந்த ஆண்டிற்கான 100 நாள் வேலைக்கான கூலியைத் தாண்டும்போதும் வேலையில்லா படி நிறுத்தப்படலாம்.

## 7. வட்டார மாவட்ட, மாநில மற்றும் தேசிய அமைப்புக்களின் பொறுப்புக்கள்

**(i) வட்டார திட்ட அதிகாரியின் பொறுப்புகள்**

- வட்டார அளவில் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.
- கிராமப் பஞ்சாயத்து மற்றும் வட்டார பஞ்சாயத்துக்களின் ஆண்டு திட்டங்களைப் பரிசீலிப்பார்.
- அனைத்து திட்டங்களையும் ஒன்றிணைத்து வட்டாரப் பஞ்சாயத்துக்கு சமர்ப்பிப்பார்.
- கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பணி
- குறைதீர்க்கும் பணி
- சமூக ஆய்வு நடக்கின்றதா என கண்காணிப்பார்
- வேலையும், கூலியும், வேலையில்லா படியும் காலம் தவறாமல் கிடைக்கிறதா என கண்காணிப்பார். இவர் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் (மாவட்ட ஆட்சியரின்) கண்காணிப்பில் செயல்படுவார்.

**(ii) வட்டார பஞ்சாயத்தின் பொறுப்புகள்**

- கிராமப் பஞ்சாயத்துக்களின் ஆண்டு திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- திட்டத்தைக் கண்காணித்து மேற்பார்வையிடுவது

**(iii) மவாட்ட பஞ்சாயத்தின் பொறுப்புகள்**

- மாவட்ட பஞ்சாயத்து மாவட்ட திட்டத்தையும், மாவட்ட வேலையாட்கள் தேவை கோரிக்கையையும் முடிவு செய்யும்.

**(iv) மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் (மாவட்ட ஆட்சியர்)**

- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் இணை மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளராகப் பணியில் துணை செய்வார்.
- தகவல் பரிமாற்ற பணி, பயிற்சி அளித்தல், வட்டார திட்டங்களை மாவட்ட திட்டங்களாக ஒன்றிணைத்தல்
- வேலைகளுக்குச் சரியான சமயத்தில் ஒப்புதல் அளித்தல், நிதியைப் பட்டுவாடா செய்தல்.

- வட்டார அளவில் 100% வேலையையும், தொழிலாளர் வருகைப் பதிவேட்டையும் என்.எம்.ஆர் (NMR) சரிபார்க்கும் பணி (10% மாவட்ட அளவிலான ஆய்வும், 2% மாநில அளவிலான ஆய்வும் நடத்தப்பட வேண்டும்.
- மாதாந்திர திட்ட முன்னேற்ற அறிக்கையைச் சமர்பித்தல்.

**(v) மாநில அரசின் பொறுப்புக்கள்**

- திட்டத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மாநில வேலை உறுதி குழுவை அமைத்து செயல்படுத்துதல்.
- மாநில வேலை வாய்ப்பு உறுதி நிதியை அமைத்துச் செயல்படுத்துதல்.
- பணியாளர்களுக்கு நிதி மற்றும் பயிற்சி கிடைக்குமாறு கண்காணித்தல்.
- திட்டத்தைக் கண்காணித்து, செயல்பாட்டில் ஒழுங்கும் வெளிப்படையான தன்மையும் உள்ளதா என கண்காணித்தல்.

**(vi) மத்திய அரசின் பொறுப்புக்கள்**

- மத்திய வேலை உறுதி குழுவை அமைத்துச் செயல்படுதல்.
- மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் மூலம் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

## 8. பயணாளிகளின் குழுவின் செயல்பாடு மற்றும் பயன்கள்

- கிராம திட்ட பயணாளிகளின் குழுவைப் பஞ்சாயத்து அமைக்க வேண்டும்.
- நரேகா தொழிலளார்களை இணைத்து அவர்கள் தங்கள் உரிமைகளையும், சலுகைகளையும் இக்குழுவில் கேட்கும் வழியாக அமைக்க வேண்டும்.
- பயனாளிகள் குழு பஞ்சாயத்துக்கும் பொது மக்களுக்கும் ஒரு பாலமாக அமையும். மேலும் தொழிலாளர்களுக்கும் பஞ்சாயத்துக்கும் இடையே ஒரு சுமூகமான உறவை அமைக்க இக்குழு உதவி செய்யும்.

## 9. தகவல் உரிமைச் சட்டத்தின் செயல்பாடு

- தேசிய தகவல் உரிமைச் சட்டத்தை நரேகாவின் செயல்பாட்டில் முழுமையாக அமலாக்க வேண்டும்.
- நரேகா குறித்து வினாவோ, ஆவணங்களோ கேட்கப்பட்டால் ஏழு நாட்களுக்குள் தரவேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் தகவலை மறுக்கக் கூடாது. அனைத்து நரேகா

ஆவணங்களும் பொது பார்வைக்கு வழங்கப்பட வேண்டும். நரேகா குறித்த ஆவணங்களின் நகல்கள் கோரப்படும்போது, நகல் எடுக்கும் செலவைவிட அதிகமாக வசூலிக்கக்கூடாது.

- தகவல்களை மற்றவர்கள் கேட்கும் முன் நரேகா குறித்த தகவல்களைப் பொது பார்வைக்கு வெளியிட வேண்டும்.

**அ. வேலை செய்யும் இடத்தில் (தகவல் பலகை)**

- ➢ தகவல் பலகை மூலம் அனைத்து விவரங்களையும் வேலைசெய்யும் இடத்தில் தெரியப்படுத்த வேண்டும்.
- ➢ வேலையாட்களின் வருகை பதிவேட்டையும் (MMR / எம்.எம்.ஆர்), செய்த வேலை, தரப்பட்ட கூலி போன்ற விபரங்களையும் வேலை முடியும்போது ஒவ்வொரு நாளும் படித்துக்காட்ட வேண்டும்.
- ➢ அளவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனி நபரின் அளவீடுகளையும் படித்து காட்ட வேண்டும்.

**ஆ. கிராம பஞ்சாயத்து அலுவலகம் மற்றும் வட்டார அலுவலகத்தில்**

- ➢ வேலை கொடுத்த விவரம். மொத்த வேலை நாட்கள், நிதி வருகை, செலவு, மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேலைகள் குறித்து விவரம் அளிக்கப்பட வேண்டும்.
- ➢ நரேகா குறித்த கணக்குகளைப் பஞ்சாயத்து அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்படவேண்டும். இதை ஆண்டில் இருமுறை புதுப்பிக்க வேண்டும்.
- ➢ சூழ்நிலை அமையுமானால் நரேகா ஆவணங்களை இணையதளத்தில் வைக்க வேண்டும்.

**தகவல் உரிமைச்சட்டத்தை நரேகாவில் முழுமையாக பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்.**

- ➢ வெளிப்படையாகச் செயல்படுவதால் மக்களின் ஆழமான நம்பிக்கையை எளிதாகவும்நிரந்தரமாகவும் பெற முடியும்.
- ➢ தவறு செய்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்போது மக்களின் ஆதரவு முழுமையாக இருக்கும்.
- ➢ தவறு நடக்க வாய்ப்புக்கள் வெகுவாக குறையும் மேலும் முறைகேடுகள் நடக்கும் வாய்ப்பும் அற்றுப்போகும்.
- ➢ சமூக ஆய்வும் எளிதாகும்.

## 10. சமூக ஆய்வுக் குழுவின் செயல்பாடு மற்றும் பயன்கள்

**சமூக ஆய்வு என்றால் என்ன?**

மக்களின் பணத்திற்கு மக்களே நடத்தும் ஒரு கணக்கு ஆய்வே சமூக ஆய்வு எனப்படும். ‘எங்கள் பணம், எங்களுக்குக் காட்டுங்கள்’ என்பதே இதன் தாரக மந்திரம். இதில் கிராமப் பஞ்சாயத்தார்கள் மற்றும் அரசு ஊழியர்கள் தாங்கள் நரேகாவின் கீழ் மேற்கொண்ட வளர்ச்சி பணிகள் குறித்த முழு விவரத்தையும் பொது ஆய்வுக்கு வைப்பார்கள். இதில்

- வேலை நடந்த இடங்கள், மற்றும்நடத்தப்பட்ட வேலை, ஒவ்வொரு நரேகா உழைப்பாளியின் மொத்த வேலை செய்த நாட்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மொத்த கூலி போன்ற முக்கிய விவரங்களை மக்களுக்குக் கூறவேண்டும்.
- இதில் ஏதேனும் முறைகேடுகள் இருந்தால் அதை ஊரில் உள்ள யார் வேண்டுமானாலும் சுட்டிக்காட்டலாம். மேலும் தவறு செய்தவர்களுக்கு தகுந்த தண்டனை தரும்படி அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

  (சமூக ஆய்வுக்கான சரிபார்க்கும் பட்டியலுக்குப் பிறசேர்க்கையில் அட்டவணையை பார்க்கவும் Table)
- சமூக ஆய்வு 6 மாதத்திற்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும்.
- 30 நாட்களுக்கு முன்பாக அது குறித்து மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு சமூக ஆய்வு கூட்டத்திற்கும் ஒரு தொழிலாளர் சமூக ஆய்வு குழு நரேகா தொழிலாளர்களை கொண்டு அமைக்க வேண்டும். மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்கள் பெண்களாக இருக்க வேண்டும்.
- ஜனவரி 16, மே 1, ஆகஸ்ட் 15, மற்றும் அக்டோபர் 2 சிறப்பு கிராமசபைக் கூட்டங்களைக் கூட்டி சமூக ஆய்வு செய்ய தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**சமூக ஆய்வு இரண்டு வகைப்படும்.**

1. தொடர் சமூக ஆய்வு. இது அனைத்து மக்களும் கீழ்க்கண்ட நிலைகளில் தொடர்ந்து கண்காணித்து ஆய்வு செய்து வருவர்.
2. சமூக ஆய்வு குழுவின் கட்டாய ஆய்வு.

## தொடர் சமூக ஆய்வின் 10 படித்தளங்கள்

குடும்பங்களைத் திட்டத்தின்போது பதிவுசெய்யும் போதும்

↓

வேலை அட்டை வழங்கும்போதும்

↓

வேலை வேண்டி விண்ணப்பம் பெறும்போது மற்றும் அதற்குத் தேதியிட்ட ரசீது வழங்கும்போதும்

↓

வேலைப்பட்டியல் மற்றும் வேலை இடங்களைத் தேர்வு செய்யும்போதும்

↓

தொழில்நுட்ப முன் வரைவு செய்யும்போதும், அதை ஒப்புதல் அளிக்கும்போதும் மற்றும் 'வேலை ஆணை' வழங்கும்போதும்

↓

வேலையைத் தொழிலாளிக்குப் பகிர்ந்து அளிக்கும்போதும்

↓

வேலையைச் செயல்படுத்தும்போதும் என்.எம்.ஆர்.- ஐ பூர்த்தி செய்யும்போதும்

↓

கூலி வழங்கும்போதும்

↓

வேலையை ஆய்வு செய்யும்போது வேலையில்லாப் படி வழங்கும் போதும்

↓

சமூக ஆய்வு குழுவின் கட்டாய ஆய்வின்போதும்

**சமூக ஆய்விற்கு முன் மற்றும் செயல்படுத்தும்போது செய்யவேண்டியவை**

- ➢ திட்ட அலுவலர் அனைத்து ஆவணங்களும் பஞ்சாயத்திடம் உள்ளதா என முன் கூட்டியே சரிபார்க்க வேண்டும்.
- ➢ சமூக ஆய்வு குழுவுக்கு பஞ்சாயத்து தேவைப்பட்ட ஆவணங்களைக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னதாகவே தர வேண்டும்.
- ➢ குழுவிடம் யார் வேண்டுமானாலும் கூடுதல் தகவல்களைத் தரலாம்.

- குழுவின் கருத்தை / கண்டுபிடிப்புகளை அவர்கள் கிராம சபையில் படித்துக் காட்டுவர்.
- திட்ட அலுவலர் அனைத்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் சமூக ஆய்வு நடக்க இருப்பதை பற்றி முன்கூட்டியே தெரிவித்து அவர்கள் ஆய்வின்போது அங்கு இருக்கும்படி பார்த்துக்கொள்வர்.
- முந்தைய சமூக ஆய்விற்குப் பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் விவரம் அளிக்கப்படும்.
- கூட்டத் தீர்மானங்களையும், நிகழ்வுகளையும் செயலாளர் குறித்துக்கொண்டு அதில் அனைவரிடமும் கையொப்பம் பெற்றுக்கொள்வர்.
- பார்வையாளராக கிராம சபையில் இடம் பெறாதவரும் கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்படலாம்.
- ‘தொழிலாளர் சமூக ஆய்வுக்குழு’ கிராம சபைக்கு அளிக்கும் அறிக்கையின் மீது பஞ்சாயத்தும், வட்டார திட்ட அலுவலரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- பஞ்சாயத்தும், வட்டார திட்ட அலுவலரும் மேல் நடவடிக்கை அறிக்கையை ஒரு மாதத்திற்குள்ளாக கிராம சபைக்கும், தொழிலாளர் சமூக ஆய்வுக் குழுவுக்கும் அளிக்கவேண்டும்.
- சமூக ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சட்டத்திற்கு புறம்பான அனைத்து செயல்களையும் புகாராகக் கருதி ஆய்வும், நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும்.
- நிதி மோசடி நடந்திருந்தால் அது குறித்து நடவடிக்கையும், பணத்தை மீட்கும் முயற்சியும் எடுக்கப்படவேண்டும்.
- அரசு ஆய்வாளர் ஆய்வு செய்யும்போது அனைத்து புகார்களையும் கருத்தில் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும். சமூக ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட புகார்களையும் அவர் கருத்தில் கொள்ள வேண்டும்.
- ஆவணங்கள் அல்லது கணக்குகளின் நகல்களை யார் வேண்டுமானாலும் நகலுக்கான கட்டணத்தை கட்டி மூன்று நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

## 11. கிராம லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் செயல்பாடு மற்றும் பயன்கள்

- கிராம 'லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு' குழுவை (வி.எம்.சி. - VMC) கிராம சபை தேர்ந்தெடுக்கும்.
- இக்குழுவில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பகுதியும், ஏனைய பிரிவினருக்கு ஏற்ற இட ஒதுக்கீடும் தர வேண்டும்.
- வி.எம்.சி VMC ஒவ்வொரு தனிப்பட்ட வேலைக்குமாக இருக்க வேண்டும்.
- இக்குழு, வேலையின் முன்னேற்றத்தையும், தரத்தையும் உறுதி செய்யும். இதில் ஒன்பது பேர் இருப்பர்.
- 50 சதவிகிதமாவது உறுப்பினர்கள் நரேகா தொழிலாளர்களாக இருக்க வேண்டும். இக்குழுவின் செயல்பாடு ஒரு வருடம் செயல்படும்.
- செயல்படுத்தும் அமைப்பு (கிராம பஞ்சாயத்து) வேலை விவரங்களையும், காலக் கெடுவையும் தர அளவீடுகளையும் இதற்கு முன்கூட்டியே தெரிவிக்கவேண்டும்.
- அறிக்கை, வேலை முடிவு சான்றிதழுடன் கிராம சபைக்குச் சமர்பிக்கப்பட வேண்டும். நகல் திட்ட அதிகாரிக்கும் அனுப்பப்பட வேண்டும்.
- திட்ட அதிகாரி வி.எம்.சி-ன் தேர்வையும் செயல்பாட்டையும் உறுதி செய்வார்.
- வி.எம்.சி-ன் ஆய்வின்போது (தங்களுக்கு அளிக்கப்படும் சரிபார்க்கும் பட்டியலைக் கொண்டு ஆய்வு செய்யவேண்டும்)
- வி.எம்.சி. உறுப்பினர்கள் வேலை செய்யும் இடத்திற்கு அடிக்கடி சென்று ஆய்வு செய்ய வேண்டும்.

## 12. குறை தீர்க்கும் முறை

- நரேகா திட்ட செயலாக்கத்தில் எந்தக் குறை இருந்தாலும் முதலில் கிராம பஞ்சாயத்தில் முறையிடப்பட வேண்டும். தீர்வு கிடைக்காத பட்சத்தில் வட்டார பஞ்சாயத்தில் முறையிடவேண்டும்.
- நரேகா குறித்த புகார் மற்றும் ஆலோசனை பெற புகார் பெட்டி ஒன்று சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் வைக்கப்படவேண்டும்.
- பெறப்படும் புகாருக்கு 7 நாட்களுக்குள் தீர்வு அளிக்க வேண்டும்.

- மக்கள், வட்டார திட்ட அதிகாரியிடம் முறையிட்டால் அவர் 7 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வட்டார திட்ட அதிகாரி 7 நாட்களுக்குள் புகாருக்கு நடவடிக்கை எடுக்காதபோது அது நரேகா சட்டத்தின் பிரிவு 25-ன் கீழ் தண்டனைக்கு உரிய குற்றமாக கருதப்படும்.
- மேல் முறையீடு, மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளரிடம் செய்யப்படும் குற்றம் நடந்திருந்தது உறுதி செய்யப்பட்டால் அவர் 'முதல் தகவல் அறிக்கை' (எப்.ஐ.ஆர்) பதிவு செய்வார்.
- அனைத்து மேல்முறையீடுகளும் நாற்பத்தைந்து (45) நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- அனைத்து மேல்முறையீடுகளும் ஒரு மாதத்திற்குள்ளாகத் தீர்க்கப்பட வேண்டும்.
- புகாரைப் புகார் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
- புகார் பெற்றுக்கொண்டதற்கு தேதியிட்ட ரசீது தர வேண்டும்.
- புகார் தீர்க்கும்போது அதைப் புகார் அளித்தவருக்கு தனிப்பட்ட முறையில் தெரிவிக்க வேண்டும்.
- மாதாமாதம் தீர்க்கப்பட்ட மற்றும் தீர்க்கப்படாத புகார்களைப் பற்றி உள்ளூர் செய்திதாள்களில் செய்தி வெளியிட வேண்டும்.
- புகார் அளிக்கும் முறை அதற்கான அதிகாரியைப் பற்றிய விவரங்கள் மக்கள் புரிந்துக்கொள்ளும் வகையில் எழுதி வைக்கவேண்டும்.
- நரேகா குறித்து தமிழக அரசிடம் புகார் தரவோ, ஆலோசனை அல்லது உதவிப் பெறவோ 1299 என்ற இலவச எண்ணிற்குத் தொடர்பு கொள்ளலாம்.
- நரேகா குறித்து மத்திய அரசிடம் புகார் தரவோ, ஆலோசனை அல்லது உதவி பெறவோ 1800110707 என்ற இலவச தொலைப்பேசி எண்ணிற்குத் தொடர்பு கொள்ளலாம்.
- வட்டார, மாவட்ட மாநில மற்றும் தேசிய அமைப்புகளின் பணியில் குறை யிருந்தாலும் புகார் தெரிவிக்கலாம்.
- மத்திய அரசின் **http:nrega.nic.in** என்ற இணையதளத்தின் மூலமும் புகார் தரவோ, ஆலோசனை அல்லது உதவி பெறவோ தொடர்பு கொள்ளலாம்.

## 13. விவசாயத்தை நரேகா மூலம் மேம்படுத்த சில ஆலோசனைகள்

விவசாய மேம்பாடு, பாசன வசதி, நிலத்தின் வளம், வெள்ள தடுப்பு மற்றும் வறட்சித் தடுப்பு வசதிகளை பொறுத்து அமையும். நரேகா இந்த அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தும் என்பதால் நரேகாவால் விவசாயம் பன்மடங்கு வளர்ச்சி பெறும். இதை மனதில் கொண்டு பஞ்சாயத்தும், விவசாயிகளும் இணைந்து நரேகா திட்டத்தை வடிவமைக்கவேண்டும்.

- விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை இல்லாத வகையில் ஆண்டு நரேகா வேலையைக் கிராம சபை மூலமாகவோ, பயனாளிகள் குழு மூலமாகவோ கலந்து திட்டமிட்டால் அனைவரும் பயன்பெற முடியும்.
- வாய்க்கால்களையும், ஆறுகளையும் நரேகா மூலம் தூர்வாருவது மூலம் விவசாயத்திற்கான பாசனத்தை மேம்படுத்தி அமோக மகசூலைப் பெறமுடியும்.
- நரேகாவின் கீழ் கிராமக் குளங்களை தூர்வாறுவதன் மூலம் தண்ணீரைச் சேகரித்து விவசாயத்திற்கும், மீன் வளர்ப்பிற்கும் பயன்படுத்தலாம்.
- நரேகாவின் கீழ் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பயிர்களைக் காக்க முடியும்.
- நரேகா மூலம் அமையும் சாலை வசதிகள் மூலம் விவசாய இடுபொருட்களையும், தானியங்களையும் எடுத்துச் செல்ல வசதியாக அமையும். சந்தைக்குச் சரியான நேரத்தில் பொருட்களை எடுத்துச்செல்ல உதவும்.
- தோட்டக்கலை வேலைகள் மூலமும், காடு வளர்ப்பு மூலமும் விவசாயம் பெரிதும் வளர்ச்சி காணும்.
- கடலோர ஆற்றுப்படுகையும், கால்வாய்களையும் தூர்வாருவது மூலம் மீன்பிடி படகுகளை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக அமையும்.
- வனப்பகுதியில் நரேகா திட்டம் மூலம் பழங்குடியின விவசாயிகளுக்குப் பன்மடங்கு உற்பத்தி பெருக வாய்ப்புள்ளது.
- தமிழகத்தில் 86 இலட்சம் நிலமற்ற விவசாய கூலித் தொழிலாளர்கள் இருக்கின்றனர். (2001 மக்கள் கணக்கு) இவர்களுக்கு நரேகாவிற்கு முன், கூலி ஆண்களுக்கு ரூபாய் 100 முதல் 120 வரையும், பெண்களுக்கு ரூ.40 முதல் 50 வரையுமாக இருந்தது. இப்பொழுது இருபாலருக்கும் 100 கூலி என்ற நிலை நரேகாவின் கீழ் வந்தமையால் விவசாயக் கூலியும் இதனால் உயர்த்தும்படி ஆகியுள்ளது. இது தற்காலிக விவசாயிகளுக்குச் சிரமமான ஒரு நிலையாக இருந்தாலும் வெகு

விரைவில் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தால் இந்த நிலை சமன் ஆகும். அடிமட்ட தொழிலாளிகளின் குறைந்த பட்ச ஊதியம் உயர்ந்தால் மட்டுமே நாம் வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களை உயர்த்த முடியும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

## 14. நரேகா தொழிலாளர்களின் ஆர்வத்தைத் தூண்ட சில ஆலோசனைகள்

- தொழிலாளர்களுக்கு அவர்கள் உரிமை குறித்தும், கடமை குறித்தும் பஞ்சாயத்தில் எடுத்துரைக்க வேண்டும்.
- திட்ட அமலாக்கத்தின் ஒவ்வொரு படியிலும் அவர்களை ஒன்றிணைத்து அவர்கள் ஒப்புதலுடன் திட்டத்தை அமல் செய்வதன் மூலம் அவர்கள் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும், பொறுப்புணர்வையும் பஞ்சாயத்து உயர்த்தலாம்.
- முறை தவறி நடக்கும் தொழிலளார்களின் மீது மற்ற தொழிலாளர்கள் ஒப்புதலுடன் நடவடிக்கை எடுக்கலாம்.
- தொழிலாளர்களுக்கு இருக்கும் நடைமுறைச் சிக்கல்களைப் 'பயனாளிகள் குழுவிலோ' அல்லது 'கிராம சபையிலோ' பேசி சுமுகமான தீர்வை கண்டு அவர்கள் துணையுடன் அமல் செய்யலாம்.
- திட்டம் நல்லமுறையில் செயல்பட்டால் மக்களுக்கும், கிராமத்திற்கும் அடுத்த சந்ததியினருக்கும் கிடைக்கப்போகும் நன்மைகள் குறித்தும் எடுத்துரைத்து அவர்களை உற்சாகப்படுத்தலம்.
- தொழிலாளர்களைப் பாகுபாடின்றி நடத்தும்போது, அவர்கள் பஞ்சாயத்து நடுநிலையாக செயல்படுகின்றது என்று எண்ணி பஞ்சாயத்துக்கு முழு ஒத்துழைப்பு தருவார்கள்.

### தொழிலாளர்களின் மாதிரி கடமைகள் பட்டியல்

1. நரேகா வேலைக்கு சரியான நேரத்திற்கு வரவேண்டும்.
2. மக்கள் நலப்பணியாளர்கள் அறிவுரையின்படி ஓய்வு நேரத்தையும் வேலை முடிவு நேரத்தையும் கடைபிடிக்கவேண்டும்.
3. கொடுக்கப்படும் வேலையை முழு ஆர்வத்துடனும் நேர்மையுடனும் செய்யவேண்டும்.
4. சக தொழிலாளர்களிடமும், பெண் தொழிலாளர்களிடமும், பஞ்சாயத்து மற்றும் அரசு பணியாளர்களிடமும் மரியாதையுடனும் பொறுப்புடனும் பேசவும், பழகவும் வேண்டும்.

5. வேலை செய்ய வரும்போது சாராயமோ, மதுவோ மற்ற போதைப் பொருளோ உட்கொள்ளாமல் வரவேண்டும்.

6. வேலை செய்யுமிடத்தில் புகை பிடிக்கவோ, புகையிலை சாப்பிடவோ கூடாது.

7. புகார்களை அமைதியாகவும், ஆக்கப்பூர்வமான முறையிலும் பஞ்சாயத்திடம் எடுத்துரைக்க வேண்டும்.

8. வேலையிலிருந்து விடுப்பு எடுக்கும் முன் பஞ்சாயத்திடம் முன்னதாகத் தெரிவித்து அனுமதி பெறவேண்டும்.

9. வாய்ப்பிருந்தால் கிராம வளர்ச்சிக்காக உடல் உழைப்பைச் சில நாட்களுக்காவது தானமாக தரலாம்.

10. கிராம சபை, சமூக ஆய்வுக் குழு, பயனாளிகள் குழு, கிராம லஞ்சம் ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டங்களுக்கு தவறாமல் வந்துக்கலந்துக் கொண்டு ஆக்கப்பூர்வ ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

## 15. பொது வேலைவாய்ப்புகளை நரேகா மூலம் உருவாக்க சில ஆலோசனைகள்

- அனைத்து பருவத்திற்குமான சாலை நரேகா மூலம் அமைக்கப்படும்போது போக்குவரத்து எளிதாகும். அதனால் வர்த்தகம் அதிகரிக்கும்.
- மக்களிடம் வருமானம் அதிகரிப்பதால் அவர்கள் உபயோகிக்கும் பொருட்கள் அதிகமாகும். இதனால் வியாபாரமும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.
- பெற்றோருக்கு வேலை கிடைப்பதால் குழந்தைகள் கல்விக் கற்பது அதிகம் ஆகும். குழந்தை தொழிலாளர்கள் குறைவார்கள். இதனால் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். குழந்தைகள் கல்வி கற்று மற்ற வேலைகளுக்கும் செல்லவும் வாய்ப்பு உண்டாகும்.
- விவசாய உற்பத்தி அதிகரிப்பதால் விவசாயம் சார்ந்த தொழில்களும் உணவு பதப்படுத்தும் தொழிலும் அதிகமாகும்.
- வேலையின்றி இடம்பெயர்ந்து சென்ற குடும்பங்கள் கிராமங்களுக்குத் திரும்பி வருவதால் கிராம பொருளாதாரம் முன்னேற்றம் காணும்.
- சிறுதொழில் மூலம் உற்பத்தியாகும் பொருட்களின் தேவை அதிகமாகும். இதனால் வேலைவாய்ப்பு கூடும்.

மேற்கூறப்பட்டுள்ள வாய்ப்புக்களை மேம்படுத்த பஞ்சாயத்து திட்டமிட்டால் விவசாயம் சாரா வேலைவாய்புக்களை அதிகரிக்கச் செய்யலாம்.

## 16. நரேகாவை மற்ற திட்டங்களுடன் இணைத்து பயன்பெற சில ஆலோசனைகள்

- நரேகா திட்டத்துடன் மற்ற திட்டங்களையும் இணைத்து அதிக பயன்பெறலாம். ஆனால் நரேகா திட்டம் மற்ற திட்டத்துடன் இணைக்கப்படும்போது நரேகா திட்டத்தின் பணம், இணைக்கப்படும் திட்டத்தின் செலவுக்குக் கட்டாயம் பயன்படுத்தக்கூடாது.
- இந்த இணைப்பு மூலம் ஏற்படும் வேலைவாய்ப்பு இந்த இரு திட்டங்களும் தனித்தனியாகச் செயல்பட்டிருந்தால் ஏற்படுத்தியிருக்கும் வேலைவாய்ப்பை விட சமமாகவோ, அதிகமாகவோ இருக்கவேண்டும்.
- இணைக்கக்கூடிய சில திட்டங்கள்
    - ➢ பிரதம மந்திரி கிராமச் சாலைத்திட்டம்
    - ➢ மழைநீர் சேகரிப்புத் திட்டம்
    - ➢ தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்
    - ➢ தேசிய தோட்டக்கலை இயக்கம்
    - ➢ தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்
    - ➢ புல்வெளி மேம்பாட்டுத் திட்டம்
    - ➢ பிற்படுத்தப்பட்ட பகுதி வளர்ச்சித் திட்டம்
    - ➢ தேசிய காடு வளர்ப்புத் திட்டம்
    - ➢ கிணறு மற்றும் நிலத்தடி நீர் மேம்பாட்டுத் திட்டம்
    - ➢ பழைய நீர்நிலைகளை மேம்படுத்தும் திட்டம்
    - ➢ பாசனப்படுகு மேம்பாடுத் திட்டம்
    - ➢ துரித பாசன வசதி பயன் திட்டம்
    - ➢ வெள்ளத்தடுப்பு மற்றும் நதி மேலாண்மைத் திட்டம்
    - ➢ விவசாயிகள் பங்கேற்பு செயல் ஆராய்ச்சித் திட்டம்

- மேலும் தேசிய கிராம நலவழித் திட்டமும் மற்றும் முதியோர் கல்வித் திட்டமும் இதனுடன் இணைக்கப்படலாம்.
- கிராம வேலை உறுதி நிதிக்கு கிராம சந்தைக் குழு கூட்டுறவு அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் இதர அமைப்புகளிட மிருந்து நிதி வசூல் செய்து இதை மற்றத் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம்.

## 17. புதிய யுக்திகள் – மற்ற கிராமங்கள் கடைபிடிக்கும் சில யுக்திகள்

- சில கிராமங்கள் தகவல் பலகைகளுக்குப் பதிலாக பெரிய சுவர்களில் நரேகா குறித்த விவரங்களை பெயிண்டில் எழுதி வைக்கின்றனர். இந்த வெளிப்படையான செயல்பாடு மூலம் பஞ்சாயத்துக்கு நன்மதிப்பு கிடைத்துள்ளது.
- நரேகா திட்டம் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் மீது மேலும் மற்ற திட்டங்களின் நிதியைப் பயன்படுத்தி பன்மடங்கு பயனைப் பல கிராமங்கள் பெற்றிருக்கின்றன.
- ராஜஸ்தான் மாநிலத்தில் அரசு சமூக ஆய்வு நடத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டு சமூக அமைப்புகளுக்கு (மஸ்தூர் கிசான் சக்தி சங்கடன் – MKSS) பயிற்சி அளித்து சமூக ஆய்வு, நரேகாவை செம்மையாகச் செயல்படுத்தவும், முறைகேடுகளை குறைக்கவும் முயற்சி செய்துள்ளது.
- மஸ்தூர் கிசான் சக்தி சங்கடன் MKSS அமைப்பு பாத யாத்திரைகள் மூலம் நரேகா குறித்த விழிப்புணர்வையும் சமூக ஆய்வு குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.
- ஆந்திர மாநிலத்தின் நரேகா மென்பொருள் நரேகாவின் கீழ் உள்ள அனைத்து வேலைகளையும் கணினிமயமாக்கியுள்ளது. பெயர் பதிவு முதல் கூலி வழங்குவது மற்றும் சமூக ஆய்வு வரை இந்த மென்பொருள் மூலம் செய்ய முடியும்.
- ஆந்திர மாநிலத்தின் தொழிலாளர்கள் தற்போது ஸ்மார்ட் கார்டு என்ற மின் அட்டைமூலம் தங்களது நரேகா கூலியைத் தானியங்கி பண பட்டுவாடா இயந்திரம் மூலமோ, வங்கி அதிகாரிகளிடமோ பெற்றுக் கொள்கின்றனர். இது கர்நாடகா மாநிலத்திலும் அமலில் உள்ளது.
- கைரேகை மூலம் நபரை கண்டறியும் எந்திரங்கள் தற்போது சில இடங்களில் நரேகா தொழிலாளர்களின் வருகையைப் பதிவு செய்ய பயன்படுகின்றது.
- நரேகா தொழிலளார்களுக்கு மருத்துவ காப்பீடு திட்டம் மூலம் காப்பீடு தரவும் மத்திய அரசுக்குத் திட்டம் உள்ளது.

## 18. நரேகாவினால் ஏற்பட்ட சில மகிழ்ச்சிகரமான மாற்றங்கள்

- தமிழகத்தில் நரேகா திட்டத்தில் 79 சதவிகிதம் பெண்கள் பயனாளிகளாக உள்ளனர். இதனால் குடும்ப வருமானமும், பெண் உரிமையும், பெண்களுக்கு குடும்ப முடிவுகளை எடுப்பதில் பங்கும், குழந்தைகள் கல்வி கற்பதும், சிறு சேமிப்பும் மற்றும் இதர பல வழிகளில் நன்மை ஏற்பட்டுள்ளது. (டுன்ங்கன்பூர்) மாவட்டம் ராஜஸ்தானில் 90 சதவிகிதம் பயனாளிகள் பெண்களாவர்)
- நரேகா கூலி பல மாவட்டங்களில் பட்டினிச் சாவையும், ஊட்டச்சத்து குறை பாட்டால் ஏற்படும் சாவையும் குறைத்து உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளது.
- வேலை தேடி நகரங்களுக்குத் தொழிலாளிகளும் அவர்களது குடும்பங்களும் செல்வது வெகுவாக குறைந்துள்ளது. இந்த மாற்றத்தை மகராஷ்ட்ராவின் விதர்பா பகுதியிலும், மத்திய பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களிலும் அதிகமாக காணலாம்.
- இடம் பெயர்ந்து நகரங்களுக்கு செல்லும் கூலி ஆட்கள் இப்போது நகரங்களில் கூடுதல் கூலி கொடுத்தால்தான் வேலை செய்வோம் இல்லையெனில் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லுவோம் எனக் கூறி கூலியை அதிகம் பெறும் நிலை வந்துள்ளது.
- கல்விக் கற்பதை நடுவில் விட்ட ஆயிரக்கணக்கான குழந்தைகள் இப்போது மீண்டும் கல்வி கற்கின்றனர்.
- இளைஞர்கள் கல்வியைத் தொடர நரேகா வேலையைச் செய்வது மூலம் கிடைக்கும் கூலியைப் பயன்படுத்துகின்றனர்.
- விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது.
- புதிதாக லட்சக்கணக்கான வங்கி கணக்குகளும் தபால் நிலையத்தில் கணக்குகளும் திறக்கப்பட்டு, மக்கள் தற்போது வங்கிகள் மூலம் ஏனைய மற்ற பயன்களையும் பெறுகின்றனர்.
- நரேகா மூலம் கிடைக்கும் கூடுதல் வருமானம் பல குடும்பங்களை வறுமை கோட்டிற்கு வெளியே கொண்டு வந்துள்ளது.
- தண்ணீர் சேகரிப்புத் திட்டம் மூலம் குடிநீர் வசதியும், பாசன வசதியும் மக்களிடமும் விவசாயிகளிடமும் மகிழ்ச்சியைக் கொண்டுவந்துள்ளது.

- பல ஆயிரக்கணக்கான பாழ் அடைந்த நிலங்கள் இன்று மீண்டும் விவசாயம் செய்யதக்க நிலங்களாக மாறியுள்ளன.
- நரேகா மூலம் அமைந்த சாலைகள் பிரசவ வேதனையால் தவிக்கும் பெண்கள் மருத்துவமனைக்குச் செல்லவும், குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவும் உதவுகின்றன.
- பேரிடர்களின் பாதிப்பைக் குறைக்கவும் அதிலிருந்து மீளவும் நரேகா பயன்படுகிறது.

## 19. நரேகா சிறப்பாகச் செயல்படுவதைக் குறிப்பிடும் அளவுகோல்கள்

- நரேகா வேலையைவிடஅதிக கூலி கிடைக்கும் வேலைகள் அதிகரித்துள்ளதா? இதனால் மக்கள் நரேகா வேலைக்கு வருவது குறைந்துள்ளதா?
- 100 நாள் வேலை கிடைத்து முடித்த குடும்பங்கள் அதிகரித்துள்ளதா?
- வெகுதூரம் சென்று வேலை செய்ய முடியாத குடும்ப உறுப்பினர்கள் தற்போது நரேகா வேலைக்கு வருகின்றனரா? அதனால் குடும்ப வருமானம் கூடியுள்ளதா?
- குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது அதிகரித்துள்ளதா? குழந்தை தொழிலாளர்கள் குறைந்தள்ளனரா?
- விவசாயம் வருமானம், மகசூல் அதிகரித்துள்ளதா? விவசாய நிலப்பரப்பு அதிகரித்துள்ளதா?
- தரிசு நிலங்கள் விளைச்சல் நிலங்களாக மாறியுள்ளனவா?
- ஆண்டு முழுமைக்கும் குடிநீர் மற்றும் பாசனநீர் கிடைப்பது அதிகரித்துள்ளதா?
- வனப்பகுதியின் அளவு அதிகரித்துள்ளதா?
- சுய உதவிக்குழுக்களின் சேமிப்பு கணக்கில் பணம் அதிகரித்துள்ளதா?
- பல மத, இன சாதியைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து நரேகா வேலையை செய்வதன் மூலம் சமூக ஒற்றுமை அதிகரித்துள்ளதா? தீண்டாமைக் கொடுமை மறைந்து வருகின்றதா?
- பெண்களுக்கு வீட்டில் உள்ள ஆண்களால் ஏற்படும் வன்கொடுமைகள் குறைந்துள்ளனவா? பெண்களின் மதிப்பு கூடியுள்ளதா? பெண்ணுரிமை ஓங்கியுள்ளதா?

மேற்கூறிய கேள்விகளில் பலவற்றிற்கு ‘ஆம்’ பதில் எனில், உங்கள் கிராமத்தில் நரேகா சிறப்பாகச் செயல்பட்டு நல்ல சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. என நீங்கள் மகிழ்ச்சி கொள்ளலாம்.

## 20. நரேகா சிறப்பாக செயல்பட்டால் கிடைக்கக்கூடிய விருதுகள்

நரேகா திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் இரண்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

1. நரேகா சட்டத்தைச் சிறப்பான முறையில் நிர்வகிக்கும் மாவட்டம் அணிக்கு தேசிய விருது (Award for Excellence in NREGA Administration)

2. நரேகா சட்டத்தையும், திட்டத்தையும் பற்றி சிறப்பான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் அமைப்புகளுக்கான விருது

**1. மாவட்ட அணிக்கான விருது**

இந்த விருதை பெற மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும். இதற்காக விண்ணப்பிக்கும் போது மாவட்ட அணி எந்த சூழ்நிலையில் செயல்பட்டது என்றும், எந்த விதமான சிக்கல்களை சந்தித்தது என்றும், அது மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும், அது ஏற்படுத்திய செயல்முறை மாற்றங்கள் குறித்தும் குறிப்பிடவேண்டும். மேலும் இதனால் ஏற்பட்ட சமூக மாற்றத்தைக் குறித்தும் விளக்கவேண்டும். 18 அம்சங்களின் அடிப்படையில் மொத்தம் 3600 மதிப்பெண்களில் ஒவ்வொரு அணியும் எடுக்கும் மதிப்பெண்ணின் அடிப்படை யில் விருது வழங்கப்படும்.

- ➢ விருது, வேலை உறுதி தினமாகி பிப்ரவரி 2ஆம் தேதி தில்லியில் வழங்கப்படும்.
- ➢ நாகை, கடலூர், திண்டுக்கல், சிவகங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் தமிழகத்திலிருந்து இந்த விருதைப் பெற்றிருக்கின்றன.

**2. வேலைவாய்ப்பு விழிப்புணர்வு விருது**

இது மக்களிடையே நரேகா வேலைவாய்ப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் மக்கள் அமைப்புகளுக்கும், அரசு சாரா தொண்டு அமைப்புகளுக்கும் வழங்கப்படும். இந்த விருது கிராம, வட்டார, மாவட்ட மாநில மற்றும் தேசிய அளவில் வழங்கப்படும். இந்த அமைப்புக்கள் விழிப்புணர்வையும், பதிவு செய்வித்தல், கூலி பெறுதல், வேலையில்லாத படி பெறுதல் மற்றும் சமூக ஆய்வுக்கும் உதவி செய்திருக்க வேண்டும்.

## 21. சட்ட அமலாக்கம் பற்றிய நிலவரம் தமிழக நிலவரம் (ஜனவரி 2010)

**சட்ட அமலாக்கம் பற்றிய தமிழக நிலவரம்**

| | |
|---|---|
| பயன்பெற்ற குடும்பங்கள் | 35,60,304 இலட்சம் |
| மொத்தம் | 1966.29 இலட்சம் |
| பட்டியல் வகுப்பினர் | 1099.1 இலட்சம் (55.9%) |
| பழங்குடியினர் | 47.17 இலட்சம் (2.35%) |
| பெண்கள் | 1549.72 இலட்சம் (78.81%) |
| மற்றவர்கள் | 821.02 இலட்சம் (41.75%)) |
| மொத்தம் துவங்கிய வேலைகள் | 43.838 |
| முடிந்த வேலைகள் | 13.310 |
| நடைபெறும் வேலைகள் | 30.528 |
| நிதி செலவு | |
| மொத்த நிதி | ரூயாப் 20,148.97 கோடி |
| மொத்த செலவு | ரூபாய் 1,372.67 கோடி |

**தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையின் செப்டம்பர் மாத அறிக்கையின் படி**

**Funds Released & Expenditure under NREGA year wise (Rs. in Crores)**

| Year | Central Govt. | State Govt. | Total | Expenditure |
|---|---|---|---|---|
| 2005-2006 | 65.72 | 7.31 | 73.03 | 3.00 |
| 2005-2006 | 65.72 | 7.31 | 73.03 | 3.00 |
| 2006-2007 | 170.89 | 18.08 | 188.97 | 151.65 |
| 2007-2008 | 516.29 | 57.29 | 573.58 | 517.84 |
| 2008-2009 | 1,401.26 | 191.98 | 1,593.24 | 1,005.50 |
| 2009-2010 | 879.297 | 42.615 | 921.912 | 1,057.21 |
| Total | 3,033.457 | 3,17.275 | 3,350.732 | 2,735.20 |

## 22. அமலாக்கத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அமைப்புக்கள்

மஸ்தூர் கிசான் சக்தி சங்கடன்
தேவ்டுன்கரி கிராமம்
பிரார் அஞ்சல்
ராஜன்மந்த மாவட்டம்
ராஜஸ்தான் மாநிலம் 313341
தொலைபேசி (அலுவலகம் - 02909 - 243254)
அலைப்பேசி +91 941 400 4180 (நிக்கில் தே)
+91941 400 3247 (சங்கர் சிங்)
இணையதளம் : http ://www.mkssindia.org/
இமெயில் : mkssrajasthan@gmail.com

உணவு உரிமை இயக்கம்
செயலகம், C/o பிஹச், ஆர்.என்.
5 ஏ ஜீன்கி ஹவுஸ்
ஷாஹப்பூர் ஜாட் புது தில்லி - 110049
தொலைபேசி 91-11-26499563
இணையதளம் : www.righttofoodindia.org
இமெயில் : righttofood@gmail.com

## 23. பிற்சேர்க்கை

**1. சமூக ஆய்விற்கான சரிபார்க்கும் பட்டியல்**

**1. திட்டமிடும் பணிகள்**

- ➢ வேலையையும் வேலை செய்ய வேண்டிய இடத்தையும் தேர்வு செய்தல்
- ➢ பொருட்கள் மற்றும் தொழிலாளரைத் தவிர வேண்டிய மூலதேவைகளைக் கொள்முதல் செய்தல்
- ➢ திறனுள்ள மற்றும் இல்லாத தொழிலாளர்களைத் தேர்வு செய்தல்
- ➢ செயல்திட்டத்தை உருவாக்குதல்
- ➢ பயிற்சி மற்றும் திசைக்காட்டல் பயிற்சி அளித்தல்
- ➢ தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகளை செய்தளித்தல்
- ➢ வேலைக்கேட்போரைப் பதிவு செய்தல்
- ➢ செய்தி பரிமாற்றப் பணிகள்
- ➢ வேலைகேட்கும் முறையைக் கண்காணித்தல்

- ஊனமுற்றோர்களுக்கு வேலை கிடைக்கிறதா என்பதை உறுதி செய்தல்
- பயனாளிகள் குழு அமைத்தல்
- கணினி மயமாக்கப்பட்ட செய்திப் பெட்டகத்தை உருவாக்குதல்
- கிராம சபைத் தொழிலாளிகள் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்தல்

**2. செயல்படுத்தும் பணிகள்**

- வேலை கேட்போரைப் பதிவு செய்யப்பட்டுள்ளதைத் தெரிவித்தல்
- வேலை அட்டையை அளித்தல்
- விண்ணபப்பத்தாரருக்கு வேலை அளித்தல்
- விண்ணபப்பதாரருக்கு வேலை அளிக்கப்பட்டள்ளதைத் தெரிவித்தல்
- கட்டுமான பொருட்கள் சரியான நேரத்திற்கு கிடைக்கிறதா என்பதை உறுதி செய்தல்
- வேலையின் தரத்தைக் கண்காணித்தல்
- நேரத்திற்கு வேலை முடிவதை உறுதி செய்தல்
- வேலை நடக்கும் இடத்தில் அறிவிப்புப் பலகை வைத்தல்
- தொழிலாளர் நலனை உறுதி செய்தல்
- கூலியை முழுமையாகவும் நேரத்திற்கும் கிடைக்கும்படி செய்தல்
- கணக்குப் பதிவேட்டின் பராமரிப்பை உறுதி செய்தல்
- குடும்பத்திற்கு 100 நாள் வேலையை உறுதிசெய்தல்
- குறைதீர்ப்பு முறையைக் கண்காணித்தல்
- வெளிப்படையான செயல்பாட்டை உறுதி செய்தல்
- வேலை தரப்படாதோரைக் கண்டறிதல்
- வேலையில்லாதோருக்கு உதவித்தொகை அளித்தல்
- இணையதளத்தின் மூலம் கண்காணித்தல்
- முன்னேற்றத்தை அடுத்தடுத்த நிலைக்கு (மத்திய மாநில அரசு தெரிவித்தல்)
- ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இயந்திரங்கள் மீதும் உள்ள தடையை உறுதி செய்தல்
- உருவாக்கப்பட்ட சொத்துக்களின் விவரத்தைப் பராமரித்தல்

**2. இந்த புத்தகம் எழுத உதவிய புத்தகங்கள் மற்றும் இணையதளங்கள்**


- NREGA - Operational Guidance 2008, 3rd Eddition, MoRD, New Delhi
- Tamil Nadu Government Gazette Extraordinary No. 181, dated 2-8-06

- ➢ (G.O. Ms. No. 89) Rural Development and Panchayat Raj (CGS. 1) Department / dated 2-8-06)
- ➢ "Employment Guarantee Act - A Primer" by by Nikhil Dey, Jean Dreze and Reetika Khdera Published by National Book Trust, New Delhi .
- ➢ NREGA சட்டம் – செயல்பாட்டு வழிகாட்டி புத்தகம், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கம், கடலூர் மாவட்டம், போன் : 04142-224023
- ➢ இணையதளம் http://nrega.nic.in/
- ➢ இணையதளம் www.righttofoodindia.org
- ➢ இணையதளம் http://www.mkssindia.org/

## 24. மேலும் விவரங்களுக்கு

| | |
|---|---|
| M.S. Swaminathan Research Foundation<br>Village Resource Centre<br>23, Mariamman Koil Behind<br>South Palpannaicherry,<br>Nagapattinam - 611 003<br>Phone : 9345555658<br>Nagapattinam_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>23, மாரியம்மன் கோயில் பின்புறம்<br>தெற்கு பால்பண்ணைச்சேரி<br>நாகப்பட்டினம் – 611 003<br>தொலைவேசி – 9345555658<br>Nagapattinam_vrc@rediffmail.com |
| M.S. Swainathan Research Foundation<br>Village Resource Centre,<br>3/1943, Iraiarasu Valagam, Main Road,<br>Thangatchimadam - 623 529<br>Ramanathapuram District<br>Phone : 04573 - 251799<br>E-mail : thangatchimadam_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>3/1943, இறையரசு வளாகம், பிரதான சாலை,<br>தங்கச்சிமடம் – 623 529<br>இராமநாதபுரம் மாவட்டம்<br>போன்: 04573 25799<br>E-mail : thangatchimadam_vrc@rediffmail.com |
| M.S. Swaminathan Research Foundation<br>Village Resource Centre<br>\|\| Main Road, Mariappan Nagar North<br>Annamalai Nagar (Post) - 608 002<br>Chidambaram Taluk<br>Cuddalore District<br>Phone : 04144 - 238378<br>chidambaram_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>2வது பிரதான சாலை, மாரியப்பா நகர் வடக்கு<br>அண்ணாமலை நகர் (அஞ்சல்) – 608 002.<br>சிதம்பரம் தாலுக்கா<br>கடலூர் மாவட்டம்<br>தொலைபேசி – 04144 – 238378<br>chidambaram_vrc@rediffmail.com |

| | |
|---|---|
| M.S. Swaminathan Research Foundation<br>Village Resource Centre<br>Mumthaj Illam,<br>No. 25, Chithannavasal Road,<br>Annavasal - 622 101<br>Illupur Taluk, Pudukottai District<br>Phone : 04339 - 231252<br>annavasal_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>மும்தாஜ் இல்லம்.<br>எண். 25, சித்தன்னவாசல் சாலை,<br>அன்னவாசல், இலுப்பூர் தாலுக்கா<br>புதுக்கோட்டை மாவட்டம்<br>தொலைபேசி - 04339 - 231252<br>annavasal_vrc@rediffmail.com |
| M.S. Swaminathan Research Foundation<br>Village Resource Centre<br>No. 82, North Street, Thiruvaiyaru,<br>Thanjore District - 613 204<br>Phone : 04362 - 261633<br>thiruvaiyaru_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>எண். 82, வடக்கு வீதி, திருவையாறு,<br>தஞ்சாவூர் மாவட்டம் - 613 204<br>தொலைபேசி - 04362 - 261633<br>thiruvaiyaru_vrc@rediffmail.com |
| M.S. Swaminathan Research Foundation<br>Village Resource Centre<br>Pillaiyarkuppam,<br>Thondamanatham Post,<br>Pazhuthavoor Road,<br>Puducherry - 605 502.<br>Phone : 0413 - 2667861 / 2666484<br>pillaiyarkuppam_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>பிள்ளையார்குப்பம்,<br>தொண்டமாநத்தம் அஞ்சல்<br>வலுதாவூர் சாலை,<br>புதுச்சேரி - 605 502.<br>தொலைபேசி : 0413 - 2667861 / 2666484<br>pillaiyarkuppam_vrc@rediffmail.com |
| M.S. Swaminathan Research Foundation<br>Village Resource Centre<br>1/292, Madurai Road, Gandhiji Nagar,<br>Opposite to Police Station, Sempatti<br>Dindigul District - 624 707<br>Phone : 0451-2556773, 2556630<br>sembatti_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>1/292, மதுரை ரோடு, காந்திஜி நகர்,<br>காவல் நிலையம் எதிரில், செம்பட்டி,<br>திண்டுக்கல் மாவட்டம் - 624 707<br>தொலைபேசி : 0451-2556773, 2556630<br>sembatti_vrc@rediffmail.com |
| M.S. Swaminathan Research Foundation<br>Village Resource Centre<br>145, Salai Road,<br>Kurusady, Nagarcoil,<br>Kanniyakumar District - 629 004.<br>nagarcoil_vrc@rediffmail.com | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>கிராம வள மையம்<br>145, சாலை ரோடு<br>குருசடி, நாகர்கோவில்<br>கன்னியாகுமரி மாவட்டம் - 629 004<br>nagarcoil_vrc@rediffmail.com |

| | |
|---|---|
| Jamsetji Tata National<br>Virtual Academy<br>M.S. Swaminathan Research Foundation<br>3rd Cross Street, Institutional Area.<br>Taramani, Chennai - 600 113.<br>Ph.: 91-44-22541698, 22541229, 22542791<br>Fax : 91-44-22541319<br>nva@mssrf.res.in | ஜாம்செட்ஜி டாடா தேசிய<br>இணையக்கல்வி கழகம்<br>மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>மூன்றாவது குறுக்குத்தெரு<br>நிறுவன பகுதி, தரமணி,<br>சென்னை - 600 113.<br>போன் +91-44-22541698, 22541229,<br>22542791 பேக்ஸ் : +91-44-22541319<br>nva@mssrf.res.in |

ஆங்கிலத்தில் மேலும் விவரம் அறிய கீழ்க்கண்ட புத்தகத்தைப் பார்க்கவும்

NREGA - Operational Guidance 2008, 3rd Edition, MoRD, New Delhi & "Employment Guarantee Act - A Primer" by Nikhil Dey, Jean Dreze and Reetika Khdera Published by National Book Trust, New Delhi (Rs. 25/- only)

தமிழக அரசின் இலவச "தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம் 2005" பற்றிய
**ஆலோசனை மற்றும் புகார் தொலைபேசி எண் 1299**

இணையதளம் : http://tnrd.gov.in/schemes/nrega.html

தமிழக அரசின் நரேகா கண்காணிப்பு இணையதளம் :
**http://www.tnregs.tn.nic.in/**

மத்திய அரசின் இலவச "தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005" பற்றிய
**ஆலோசனை மற்றும் புகார் எண் 1800110707**

இணையதளம் : **http://nrega.nic.in/**

## ஆலோசனைதாரர்கள்

| | |
|---|---|
| **செல்வி S.நாமகிரி,**<br>திட்ட அலுவலர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>நாகப்பட்டினம் மாவட்டம் | **திருமதி. மல்லிகா**<br>ஊரக வளர்ச்சி அலுவலர்<br>தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட அலுவலகம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>நாகர்கோவில் - 629 001.<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| **திரு. S.K.கண்ணன்**<br>உதவி செயற்பொறியாளர்,<br>சாலை மற்றும் பாலங்கள்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>மயிலாடுதுறை துணை பிரிவு,<br>நாகப்பட்டினமஸீ மாவட்டம் | **திரு. தெய்வசிகாமணி,**<br>திட்ட அலுவலர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>நெல்லித்தோப்பு, புதுச்சேரி |
| **திரு. R.பாபு,**<br>வட்டார வளர்ச்சி அலுவலர், NREGA,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>புதுக்கோட்டை. | **திரு. எஸ்.ரகுநாதன்**<br>செயலாக்கப் பொறியாளர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>நெல்லித்தோப்பு, புதுச்சேரி |
| **திரு. C.எடிசன்,**<br>உதவியாளர், NREGA பிரிவு,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>புதுக்கோட்டை | **திரு. ஜெஸி ஞானசேகரன்**<br>உதவி மேலாளர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>திண்டுக்கல் |
| **திரு. சவுரிராஜன்,**<br>உதவி திட்ட அலுவலர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>தஞ்சாவூர். | **திரு. இராஜேந்திர ரத்னூ,** இ.ஆ.ப.<br>கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர்,<br>மாவட்ட ஆட்சியாளர் அலவலகம்,<br>நாகர்கோவில் - 629 001.<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| **திரு. சந்திரசூடன்,**<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>தஞ்சாவூர். | **திரு. அருணகிரி,**<br>உதவி திட்ட அலுவலர்,<br>தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட அலுவலகம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>நாகர்கோவில் - 629 001.<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| **திரு. தனசேகரன்,**<br>திட்ட அலுவலர்,<br>தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட அலுவலகம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>நாகர்கோவில் - 629 001.<br>கன்னியாகுமரி மாவட்டம் | |

## ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கிராம வள மையங்களின் அலுவலர்கள்

**நாகப்பட்டினம் கிராம வள மையம்**
செல்வி S.வேல்விழி
திரு. P.முகில்நிலவன்
திரு. R.சரவணன்

**அன்னவாசல் கிராம வள மையம்**
திரு. R.ராஜ்குமார்
திரு. S.குருமூர்த்தி
திரு. S.முருகேசன்

**புதுச்சேரி கிராம வள மையம்**
திருமதி. D.S.கிரிஜா
திரு. G.ஜெயகிருஷ்ணன்
திரு. C.லூர்துசாமி மலையப்பன்

**தங்கட்சிமடம் கிராம வள மையம்**
திருமதி. R.ஸ்ரீகிருபா
திரு. J.ஆரோக்கிய கெவிக்குமார்
திரு. K.அப்துல் சலாம்

**நாகர்கோயில் கிராம வள மையம்**
திரு. A.முகமது பிலால்
திரு. M.ஏசுதாஸ்

**செம்பட்டி கிராம வள மையம்**
திரு. A.ஆனந்த்
திரு. CAS.பிரிட்டோ

**திருவையாறு கிராம வள மையம்**
திரு. M.முத்துகுமார்
திரு. G.முருகன்

**சிதம்பரம் கிராம வள மையம்**
திரு. R.இளங்கோவன்
திரு. D.வீரராஜ்

**சென்னை கிராம வள மையம்**
திரு. S.செந்தில்குமரன்
திரு. J.ஸ்ரீநாத்
திருமதி. நான்சி J.அனபல்
திரு. P.சிவகுமார்
திரு. S.ஜெகன் கருப்பையா
திரு. S.சுரேந்திரன்
திரு. M.செல்வராஜ்
செல்வி. M.கிருத்திகா
செல்வி. ஆரோக்கிய மேரி எடோலின்
திரு. R.கோலப்பதாஸ்